1067

d. M. 1803. Vol. III—No. 6.

OFFICE OF THE REGIST OF B
1 MAR 1926
MADE

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:
கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

குஞ்சம் கட்டின

பட்டு லேஞ்சிகள்

நைஸான பட்டு, உடல் திக்கானது. பல வருடங்கள் உழைக்கும். பல வித மேகவர்ணக் கலர்கள், வெள்ளை, நீலம், சந்தணக் கலர் முதலிய பல கலர்கள்.

5 மு × 40 இஞ்சு 1-க்கு ரூ. 10,

ஷை ஜரிகை கரைகள் போட்டது ரூ. 12 முதல் 14 வரை.

இமிட்டேஷன் ஸில்க் புடவைகள்

இந்தப் புடவைகளைப் பார்த்தால் அசல் பெங்களூர் பட்டுப் புடவைகளைப் போல் இருக்கும். கலருக்கு உத்திரவாதம். கலர் :—அரக்கு, மஞ்சள், கருப்பு, நீலம் முதலிய கலர்கள்.

18 மு × 2½ அகலம் புடவை 1-க்கு ரூ. 12, முதல் 20.

எங்களிடம் சேலம், மதுரை, கோரநாடு, கராச்சி, காசி முதலிய ஊர்களி லிருந்து புதுமாதிரியான பல ரகங்கள் ஏராளமாய் வந்திருக்கின்றன. நீங்கள் வேறிடங்களுக்குப் போகுமுன் ஒரு முறை எங்களிடம் வந்து பாருங்கள்.

வலைப் பனியன்

போத்தானில்லாதது நைஸானது

பனியன் 1-க்கு ரூ. 1, 1-4, 1-8.

கே. எவ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

188, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

சென்னை.

OFFICE OF THE ... 1 MAR ... MADRAS

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் ௩.	குரோதனவருஷ தைமீ 1926 ஜனவரி	இதழ் ௬.

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	265
2.	வேண்டல்	266
3.	பண்டோராவின் பணிப் பெட்டி ...	267
4.	ஆரம்ப போகம்	280
5.	பானுபாய்	289
6.	மைரா என்னும் பிரமாண்ட நட்சத்திரம் ...	300
7.	மகரிஷி தயானந்தர்	301
8.	பிரம்மச்சர்யத்தின் உயர்வு	303
9.	இயற்கைப் பொருணூற் கடலின் ஒரு சிறு துளி	306
10.	பத்திராதிபர் குறிப்புகள்	314

சித்திரப் படங்கள்.

1. கோகலேயும் காந்தியும்.
2. பாரிஸ்டர் காந்தி.

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1-க்கு இந்தியா, பர்மா, சிலோன்	ரூ. 2 0
வெளி நாட்டுக்கு வருடம் 1-க்கு சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ: 2 8

தனிப்பிரதி அணா 4.

நமது "லக்ஷ்மி" ஒவ்வொரு ஆங்கில மாத முடிவிலும் வெளியாகும். பத்திரிகை கிடைக்காதவர்கள் மறு மாதம் 10வுக்குள் சந்தா நம்பருடன் நமக்குத் தெரிவிக்க வேண்டும். அதற்குமேல் கவனிக்கப் படமாட்டா. மானேஜர்.

உங்கள் புத்தகசாலை பூர்த்தி யாகாது?

லக்ஷ்மி இதழ் 12-ம் காலிகோ பைண்டு செய்யப்பட்டு, கில்ட்டு எழுத்துடன் கூடிய 'லக்ஷ்மி' மலர் ஒன்றுக்கு ஆர்டர் செய்யுங்கள். ௮00 பக்கங்கள் 30 படங்கள் உள்ளது. புஸ்தகம் வைத்துக் கொள்வதற்கு அழகான பெட்டியுடன் விலை ரூ. 3. தபாற் செலவு வேறு சொற்பக் காப்பிகளே

கைவச முள்ளன.

முந்துங்கள்.

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், தபால் பெட்டி 99, சென்னை.

OFFICE OF THE R
1 MAR

லக்ஷ்மி துதி.

நோக்கஞ் சிறிதும் என்மேல் வைத்
திலாய் மிக நொந் திளைத்துங்
காக்க வல்லாற்கு அருள் செய்த நின்
கட்கடைக் காத லுற்றேன்
ஊக்கமும் மெய் யுணர்வுங் கொடுத்
தாண்டு இவ்வுல கறிபேர்
ஆக்கமுந் தந்தருள்வாய் செய்ய
தாமரை ஆரணங்கே !

21035
சென்னை 600 008

வேண்டல்.

ஒருமை யுடன் நினது திரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்

பெருமை பெரு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித் தொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்

மருவு பெண் ணாசையை மறக்க வேண்டும்-உன்னை
மறவா திருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்

தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள் வளர்
தல மோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்ய மணி உண்முகச் சைவமணி
ஷண்முகத் தெய்வ மணியே!

—ராமலிங்கர்.

பண்டோராவின்
பணிப் பெட்டி

ஸ்ரீமான் பண்டிதர் சி. வீரபாகு பிள்ளை யவர்கள் எழுதியது.

நமது கதையின் ஆரம்பத்தில் யவன நாடு அதி பாலிய தசையில் தான் இருந்தது. பாரத நாட்டின் நனி நாகரிகம் யவனர்களின் கண்களை இன்னும் கவர்ந்து கொள்ளவில்லை. யவன நாட்டுச் சிற்பச் செல்வங்களும் பாரத தேசத்துப் பெரு மாளிகைகளை அலங்கரிக்க வில்லை. அந்தப் பழமை யான காலத்திலே யவன நாட்டிலே வானுலகத்துத் தெய் வங்கள் போக்கு வரவு புரிந்து அந் நாட்டின் வாழ்விலும் தாழ்விலும் கண்ணும் கருத்துமா யிருந்தார்கள். யவனர் களின் வாழ்க்கையை நடத்தும் சூத்திரக் கயிறு வானத் துத் தெய்வங்களின் கைகளிலேயே இருந்து வந்தது. யவனர்களெல்லாம் அக் கடவுளருக்குக் கொத்தடிமைகள். இவர்கள் அந்த ஏகாதிபத்தியத்தி லிருந்து விலகிச் சுய ராஜ்ய மடைய முதன் முதல் முயற்சி செய்தவர்கள் பூதர்க ளாகிய **தித்தானியர்களே.**

இந்தத் தித்தானியர்கள் வானத்தை உருவாக்கிய ஆண் தெய்வமாகிய யுரானசுக்கும் பூமியை உருவாக்கிய பெண் தெய்வமாகிய கே என்பவளுக்கும் பிறந்தவர்கள். இவர் கள் அஃகிய அறிவும் அஞ்சா நெஞ்சும் படைத்த சூரர்கள். மக்களெல்லாம் அடிமைத்தனத்தி லிருந்து நீங்கிச் சுக வாழ்வு வாழ வேண்டு மென்ற பெரு நோக்கத்தோடு அதற்கு வேண்டுவனவற்றைத் தேடத் தொடங்கினார்கள். அதனால்தான் தேவர்களுக்கு இவர்களைக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. தேவர்களோ தங்களுடைய அரிய வஸ்துக் களையும் அற்புத வித்தைகளையும் மக்கள் தெரிந்து கொள் ளக் கூடாதென்ற நோக்க முடையவர்கள். அவை மனிதர் களுக்குத் தெரிந்து விடுமானால் அவர்கள் தங்கள் ஆளு கைக்கு அடங்கி நடக்க மாட்டார்க ளல்லவா? அப்பொழுது

தாங்கள் அரசாளும் உரிமையை அடியோடு இழக்க வேண்டியதுதானே. அதற்காகவே அவர்கள் அப்பொருள்களையும் கலைகளையும் மக்கள் அறியக் கூடாதபடி மறைத்துப் போற்றி வந்தார்கள். அந்த மறை பொருளை ஒரு காலத்திலும் மனிதர்கள் தெரிந்து கொள்ளக் கூடாதென்ற கவலையும் அவர்களுக்கு இருந்தது. இந்த சூக்ஷமத்தைத் தித்தானியர்கள் அறிந்து விட்டார்கள். அறிந்ததோடு நில்லாமல் அவர்கள் மறைத்துப் பாதுகாக்கும் செல்வங்களையும் கலைகளையும் பெற்று மனித வர்க்கத்துக்கு உதவ வேண்டுமென்றும் நினைத்தார்கள். அதை அறிந்ததும் தேவர்களுக்குத் திகில் ஏற்பட்டு விட்டது. அவர்கள் திகில் அடைந்தது போலவே தித்தானியர்கள் வான நாட்டு வேந்தனை ஜூபித்தரோடு போர்புரியப் புறப்பட்டார்கள். போரும் நெடு நாள் நடந்தது. முடிவில் ஜூபித்தரே வெற்றி பெற்றான். தோற்றோடிய தித்தானியர்களைத் தேவர்பதி பிடித்துக் கட்டிப் பாதாள லோகத்துக்கே தள்ளி விட்டான்.

தித்தானியர்களது புத்திரர்கள் தங்கள் பெற்றோர்களைப் போல அவ்வளவு பலசாலிகள் அல்ல. ஆனாலும் 'மகனறிவு தந்தை அறிவல்லவா?', அவர்களும் கடவுளர்களது கலைச் செல்வங்களையும் சிருஷ்டி அற்புதங்களையும் அறிந்து கொள்ள முயன்று வந்தார்கள். அவர்களிலே **பிரோமிதியன்** என்பவன்தான் பேர் போனவன். இவனே பயன் படும் பல நற்செய்கைகளைச் செய்து அதனால் 'மனித வர்க்கத்துக்குக் கண்ணும் ஆவியும் போன்றவன்' என்று பின்னுள்ளவர் புகழும்படி விளங்கினான்.

அக்காலத்திலே இவனது அளவு கடந்த பரோபகார சிந்தையையும் விடா முயற்சியையும் கண்ட **மினர்வா** என்ற கலைமகள் பெரிதும் மகிழ்ந்து இவனிடம் வந்து "பிரோமிதியனே! உன் வேலைக்கு உபகாரமாகும் வானத்துப் பொருள்கள் எவையாயினும் கேள்; உனக்குத் தருகிறேன்" என்றாள். தான் விரும்பும் பொருளைப் பாரதி தரமாட்டாளென்பது பிரோமிதியனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவன் சாமர்த்தியமாக அவளைப் பார்த்து "அம்மே! வானத்துப்

பொருள்கள் இன்னதென்றே தெரியாத பொழுது நான் எதை உங்களிடம் கேட்கப் போகிறேன்" என்றான். அதற்கு மினர்வா "உண்மைதான்; நான் உன்னை இப்பொழுது அங்கே அழைத்துக் கொண்டு போகிறேன். ஆனால் நெடு நேரம் நீ அங்கே தங்க முடியாது. விரைவில் உனக்கு வேண்டும் பொருள்களைத் தெரிந்து கொண்டு திரும்பி விட வேண்டும்" என்றாள்.

பிரோமிதியன் அதற் கிசைந்து மினர்வாவோடு வான நாட்டுக்குப் போனான். அந்நாட்டிலே அவன் விரும்பும் பொருள் சூரியனிடத்திலுள்ள நெருப்பு ஒன்றுதான். தேவர்களோ அந்த நெருப்பைத் தங்கள் கண்மணிப்பாவை போலப் போற்றி வருகிறார்கள். தாங்களே யன்றி வேறு யாரும் அந்த அபூர்வ வஸ்துவின் பயனை அடையக் கூடா தென்ற நினைவும் அவர்கள் உள்ளத்தில் வேரூன்றி இருக்கிறது. மினர்வாவும் கூட நெருப்பைத் தருவதற்குப் பின் வாங்கத்தான் வேண்டும். இது பிரோமிதியனுக்கு நன்றாகத் தெரியும். அதனால் அவன் தான் கொண்டுவந்திருந்த புகல் தண்டிலே யாருக்கும் தெரியாமல் கொஞ்சம் நெருப்பை எடுத்து வைத்துக் கொண்டு பூமிக்கு வந்து விட்டான். இந்த நெருப்பினால் அவன் அடைந்த நன்மை கொஞ்சமில்லை. மனித வாழ்க்கையிலே அன்றாடகம் உபகாரமாகும் புதுப் புதுச் சாமான்கள் எத்தனையோ செய்தான். அவைகளை யெல்லாம் ஜனங்களுக்குக் கொடுத்து அவர்களை முன்னிலும் கோடி மடங்கு நாகரிகமாக வாழும் படி செய்தான். தான் வெகு சிரமத்தோடு கொண்டு வந்த நெருப்பாகிய அபூர்வ வஸ்துவின் பிரயோஜனத்தை அவர்களுக்குக் கற்பித்து அவர்களிலும் பலரைப் பெரிய பெரிய சிற்ப நிபுணர்களாக்கி உலக நாடக சாலையை ஒரு புதுமாதிரியாக ஜோடித்து விட்டான். அவன் சருவா அன்போடு இவ்விதம் ஜன சமூகத்துக்கு நன்மை புரிந்து வரவே தேவர்களுக்குக்கோபமும் பொறாமையும் அதிகரித்து விட்டன. அதற்குக் காரணம் யார்? பிரோமிதியனல்லவா? அவன் தானே இவர்களது சேமக் காப்பிலுள்ள நெருப்பைத் திருடிக்கொண்டு வந்தது மல்லாமல் அதனால் என்னென்னவெல்லாம் செய்து மனிதப் பயிரை வளம்படச் செய்து விட்

டான். அதனால் தேவர்கள் எப்படியாவது அவனையும், அவனால் நல்லறிவும் நாகரிகமும் அடைந்த பிரஜைகளையும் சல்லியத்துக் குள்ளாக்கி ஒரு காலத்தும் அவர்கள் தங்களுக்குச் சமமாக முடியாத படி செய்து விடவேண்டுமென்று எண்ணினார்கள்.

இது நாள் வரையும் மனித வர்க்கம் மிகுந்த சந்தோஷகரமாகவே இருந்தது. நோய், துன்பம், கவலை முதலானவை ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது. தீய நினைவே இல்லாமையால் அவர்கள் தீய செயல்களும் செய்ததில்லை. அவர்கள் வாழ்க்கையோ ஆரம்பரம் இல்லாத வாழ்க்கை. வியாதி என்றால் கறுப்போ சிவப்போ என்பார்கள். சுகானுபவம் என்பது அவர்களிடத்தில் சம்பூர்ணமாகக் குடிகொண்டிருந்தது.

இன்றைக்கோ பிரொமிதியன் செய்த செய்கையால் அவர்கள் இந்த இன்பத்தை யெல்லாம் இழக்கும்படியாயிற்று. விளக்கடியில் இருள் இருப்பது போல இன்பத்தினிடையில் துன்பமும் கலந்து கொள்ளும்படி அத்துன்பங்களை அனுப்பத் தேவர்கள் தீர்மானித்து விட்டார்கள். அதுவே சரியான தண்டனை யென்றும் அவர்களுக்குப் பட்டது. அதற்காகத் தேவர்கள் என்ன செய்கிறார்களென்பதை இனிப் பார்ப்போம்.

தேவேந்திரனான ஜூபித்தர் ஜோதி உலகத்துக்கு அரசனும், கொல் தொழிலில் வல்லவனுமாகிய வல்கனை அழைத்து ஒரு அழகிய பெண் உருவம் செய்து தரும்படி சொன்னான். வல்கனும் அவன் கட்டளைப் படியே பெண் உரு ஒன்று சமைத்தான். கொல்லிப் பாவை போல அத்தனை நேர்த்தியாக அந்தப் பெண் உருவம் இருந்தது. பின் இந்திரன் அதற்கு உயிர் வரும்படி செய்தான். உயிரோடெழுந்த அந்தப் பெண் மணிக்கு 'எல்லாம் தருபவள்' என்ற பொருள் உள்ள பண்டோரா என்ற பெயர் இடப்பட்டது. பிரதானமான ஒவ்வொரு தெய்வமும் அவரவருக்குச் சொந்தமான சிறப்புக்களை யெல்லாம் அவளுக்குச் செய்யத் தொடங்கினார்கள்.

பண்டோராவின் பணிப் பெட்டி

அழகுக்கும் காதலுக்கும் அதிதேவதையான ஆவிரதை அவளுக்கு லாவண்யமும் சௌந்தரியமும் சௌகுமார்யமும் அளித்தாள். இசைக்கும் இசைப் பாட்டுக்கும் தேவனான அபாலோ குழலும் வீணையும் குழையும்படி இனிய குரலைக் கொடுத்தான். இங்ஙனமே மற்றத் தெய்வங்களும் தங்கள் தங்களா லான சிறந்த வெகுமதியை அவளுக்குக் கொடுத்து விட்டார்கள்.

இவ்விதம் சகல பாக்கியங்களும் குறைவில்லாமல் பெற்ற பண்டோராவுக்குச் சீதனமாக ஒரு பணிப் பெட்டியையும் தேவர்கள் வைத்திருந்தார்கள். அப் பெட்டியில் தான் துன்ப ஹேதுக்க ளெல்லாம் சிறை யிருக்கின்றன. பெட்டியை இவளிடம் ஒப்புவித்ததும் இவள் அதைத் திறந்து தளை யிட்டவைகளை விடுவிப்பாள் என்று தேவர்களுக்கு நன்ருகத் தெரியும். அதனல் அவர்கள் அவளிடம் "இந்த விலை யேறப் பெற்ற பணிப் பெட்டி உன் சீதனப் பொருளாகும்" ஆனல் அதை நீ எந்தக் காலத்திலும் திறக்க மட்டும் செய்யாதே. என்ருர்கள். தேவ தூதனை மேர்க்குரி தேவேந்திரன் கட்டளைப்படி அந்த மந்திரப் பெட்டியோடு பண்டோராவையும் அழைத்துக் கொண்டு வானிலிருந்து இறங்கி வந்து நேராகப் பிரொமிதியன் வீட்டுக்கே போய்ச் சேர்ந்தான்.

பிரொமிதியுன் தன் தலை வாசலிலே ஒரு அழகிய நங்கை நிற்பதைப் பார்த்தான். அவள் அருகிலே மெர்க்குரியும் நின்று கொண்டிருக்கிருன். அதனல் அவள் வானுலகத்தி லிருந்து வந்தவளாக முடிந்தது. இவளால் அவனுக்கு ஆக வேண்டியது என்ன இருக்கிறது? ஒன்றும் இல்லை. பகைக் குணமுடைய தேவர்கள் தன்னைச் சல்லிபத்துக் குள்ளாக்கு வதற்காகவே இந்த இந்திர ஜாலம் செய்திருக்கிருர்கள் என்று அவன் நினைத்தான். கொஞ்சம் தாமதித்தால் அவள் சுந்தர வடிவம் தன்னை மயக்கவும் கூடும். அப்பொழுது தன் கோப மெல்லாம் குலைந்து விடும் என்ற பயமும் அவனுக்கு அதிகமாக இருந்தது. ஆகவே அவன் மெர்க்கரியை அழைத்து "ஐயா! எனக்கு முன்பின் அறிமுகமே இல்லாத இவள் இங்கு வரக் காரணம் தெரியவில்லை. தெரிய விருப்பமும் இல்லை. தயவு செய்து

சிறிதும் தாமதமல் இவளைக் கூட்டிக் கொண்டு போய் விடுங்கள்'' என்று சொல்லி விட்டான்.

பிரோமிதியன் இப்படி மறுத்து விட்டானே யென்று மெர்க்குரி கவலைப் பட்டானா? 'இவன் இல்லாமல் போனால் இவன் தம்பி' என்று எண்ணிக் கொண்டு ஒன்றும் பேசாமல் வெளியேறிப் பிரோமிதியன் சகோதரனான எபிமிதியன் வீட்டுக்குப் போனான். 'விண்ணருள வந்த தொரு மெல்லமுத மென்ன' வந்து நின்ற பண்டோராவை எபிமிதியன் பார்த்ததும் தன் மனத்தை அவள் சௌந்தரியத்துக்கு அடிமையாக்கி விட்டான். பண்டோராவும் தன் எதிரிலிருக்கும் எபிமிதியனது மாசு மறுவில்லாத அழகிலே ஈடுபட்டுத் தன் மனத்தில் ஒரு உயர்ந்த ஸ்தானத்தை அவன் அப்பொழுதே ஸ்திரமாக வசிக்கும்படி செய்து விட்டாள். இவர்கள் கண்களும் கூட இப்பொழுது மிகுந்த பழக்க முடையவர்கள் போலத் தங்கள் தங்கள் மனக் குறிப்பை அவைகளது சுயபாஷையிலே பேசத் தொடங்கி விட்டன. எபிமிதியனுக்கோ அவன் தமயன் எவ்வளவோ புத்திமதி சொல்லி யிருந்தான். தேவர்கள் என்ன சிறந்த பரிசை அளித்தாலும் வாங்கக் கூடாதென்பது அவன் இட்ட கட்டளை. இவனும் அதை மறந்துவிட வில்லை. இந்நாள் வரையும் நினைத்துக் கொண்டுதான் இருந்தான். இப்பொழுதோ அதைச் சிந்திக்க முடியாதபடி அவன் மனம் பண்டோராவுக்குச் சொந்தமாகி விட்டது. இன்னும் ஒரு மனம் மட்டும் கூட இருந்திருந்தால் தமையன் கட்டளையை நினைத்தே இருப்பான். அதற்கு வழியில்லை. ஆகவே அவன் 'குன்றும் சுவரும் திண் கல்லும் புல்லும் கண்டுருக' நின்ற பெண் ரத்தினத்தைத் தடை ஒன்றும் சொல்லாமல் அன்போடு வரவேற்றுக் கொண்டான். மெர்க்குரியும் அவர்களை ஆசீர்வதித்து அவள் சீதனப் பெட்டியையும் கொடுத்து அதை எந்தக் காரணத்தை முன்னிட்டும் திறக்கக் கூடாதென்று அவர்கள் இருவரிடத்தும் சொல்லி விட்டுப் போய் விட்டான். அங்கே, தேவர்கள் என்ன வாகுமோ என்ற கவலையோடு ஒலிம்பிய மலையில் இருந்து தங்கள் தூதன் வரும் வழிமேல் விழி வைத்து ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மெர்க்குரி

யும் அங்கு சென்று அவர்களிடம் நடந்ததை யெல்லாம் ஒன்றும் விடாமல் கூறி முடித்தான். அவர்களும் தங்கள் எண்ணம் நிறை வேறிய தாகவே கருதிச் சந்தோஷித்தார்கள்.

இங்கே மெர்க்குரி திரும்பினனே இல்லையோ பண்டோராவுக்குத் தன் சீதனப் பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டு மென்ற நினைவு பலப்பட்டு விட்டது. எபிமிதியனுக்கும் அந்த அபிநவ வேலைப்பாடுள்ள பெட்டியின் உள்ளிருப்பதைக் காண வேண்டு மென்ற ஆசை யிருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் மெர்க்குரியின் ஆக்ஞையை மீறி நடக்க அவனுக்கு மனம் வரவில்லை.

அந்நேரம் பண்டோரா "இந்த அபூர்வ வேலைத்திறம் வாய்ந்த பெட்டியிலே நாம் இது வரையும் கண்டிராத ஒரு புதுமை இருக்கத்தான் வேண்டும். ஆகையால் இதைத் திறந்து பார்ப்போம்" என்றாள்.

அதற்கு எபிமிதியன் "என் அன்பே! அதனால் நமக்கு ஏதாவது துன்பம் சம்பவிக்கு மென்றே தேவ தூதன் பெட்டியைத் திறக்கக் கூடாதென்று சொல்லி யிருக்கிறான். அதை மீறி நாம் திறப்பது சரியில்லை" என்றான்.

பண்டோரா "அப்படி என்ன துன்பம் வந்து விடப் போகிறது. துன்பம் தரும்படியான வஸ்துவையா தேவர்கள் எனக்குச் சீதனமாகத் தருவார்கள்? என்னை இங்கு அழைத்து வந்த மெர்க்குரி அவ்விதம் ஒன்றிருந்தால் அதைப் பற்றி என்னிடம் சொல்ல மாட்டானா? பெட்டியை நாம் திறந்து பார்ப்போம். நம் இருவரையும் வசீகரிக்கும் படியான சிறந்த வஸ்து அதில் இருக்கவே செய்கிறது" என்றாள்.

அவள் என்ன சொல்லியும் எபிமிதியன் இணங்க வில்லை. ஒரே பிடிவாதமாகக் 'கூடாது' என்று விட்டான். பண்டோராவுக்கும் அவன் பேச்சு கொஞ்சமும் பிடிக்கவில்லை யானாலும் அவனது அன்பும், ஆண்மையும், காம்பீரியமும், இன்சொல்லும் யௌவனமும் அவளைத்

தடுத்து ஒரு வார்த்தையும் சொல்ல முடியாமல் செய்து விட்டன.

சில நாள்கள் சென்றன. ஒரு நாள் எபிமிதியன் தன்காதல் தோழியின் கரிய கூந்தலுக்குப் பூச்சூட்டிப் பார்க்க நினைந்து நந்தவனத்துக்குப் போயிருந்தான். அந் நேரம் பண்டோரா பணிப் பெட்டியின் அருகே வந்து அதைப் பார்த்தாள். பொன்னும் மணியும் கலந்து அதி விசித்திரமாகச் செய்த அந்தப் பெட்டி—சிற்பக் கலையின் சாதுரியமெல்லாம் ஒருங்கே அமைந்து திகழும் செல்வப் பெட்டி அவள் காதல் தோழனின் எச்சரிப்பு மொழியைக் கூட மறக்கச் செய்து விட்டது. அதன் அருகிலிருந்து, முகப்பிலும் மேல் புறத்திலும் மற்றைப் பக்கங்களிலும் பல நிறப் பூக்களைப் பல பல விதமாக ஜோடித்து வைத்திருப்பது போல நவமணிகளையும் கொண்டு செய்திருக்கும் புஷ்ப ஜாலங்களின் அழகு வெள்ளத்திலே முழுகித் தன்னையே மறந்து போய் விட்டாள்.

அப்பொழுது பெட்டியி னுள்ளிருந்து யாரோ பேசுவது போலக் கேட்டது. பண்டோரா மிகுந்த வியப்போடு "பேசுவதற்கு அங்கு யார் இருக்கலாம். எல்லாம் வரவரப் பார்த்துக் கொள்வோம்" என்று மவுனமாக இருந்தாள். உள் ளிருப்பவைகள் "இரக்க முள்ளவளே! இந்த இருள் சிறையிலிருந்து எங்களைத் திறந்துவிடு; நீ அந்தப் பேருதவி செய்வாயானால் இது வரையும் அறிந்திராத எத்தனையோ புதிய விஷயங்களை யெல்லாம் இந்த மண்ணுலகத்தி லிருப்பவர்கள் யாவரும் இன்னும் ருசி பார்த்திராத சம்பவங்களை யெல்லாம் தெரிந்து கொள்வாய். அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என் உடையரேனும் இலர். என்ற தேவ மொழியை நினைத்துப் பார். தெய்வங்களைப் போல நீயும் அறிவு வளம் பெற வேண்டும்" என்றன.

இந்த மயக்க மொழிகளைக் கேட்ட பண்டோராவுக்கு அந்த நூதன வஸ்துக்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அதிகரித்தது. இனி அதை அவளால் தடுக்க

முடியவில்லை. அவள் "நாம் ஏன் இந்தப் பெட்டியைத் திறக்கக் கூடாது. நிச்சயமாக ஒரு கேடும் சம்பவிக்காது. அதோடு நாம் பல புதிய விஷயங்களையும் தெரிந்து மேன்மை அடையலாம். அறிவை விருத்தி பண்ணுவது ஒரு குற்ற மாகாது. நம் புதிய தோழன் வந்து விடுவானுல் இதற்குச் சிறிதும் இசையப் போகிறதில்லை. அவன் வருவதற்குள் இந்தத் துர்ப்பாக்கிய மூள்ள பிராணிகளை விடுவித்து அவற்றின் மூலமாகப் பல விஷயங்களைத் தெரிந்து கலைமகளான மினர்வாவைப் போல ஆகவேண்டும்" என்று நினைத்துப் பெட்டியின் தாழைத் திறந்து விட்டாள்.

திறந்தது தான் தாமதம். ஐயோ! எபிமிதியனே! என்று கூவிக்கொண்டு பிரக்ஞை இல்லாமல் அப்படியே சாய்ந்து விட்டாள். பெட்டியிலிருந்து சிறு சிறு கூளிப்பேய்கள் பயங்கரமான கரிய முகமும் அஞ்சத்தக்க கொடுக்குமாக வந்து உலாவத் தொடங்கின. இதற்குள் எபிமிதியனும் அவள் கூக்குரல் கேட்டுத் திகைத்துப் போய் ஓடோடியும் வந்து பார்த்தான். விஷயம் தெரிந்தது. நடந்ததை நினைப்பதில் பயனில்லை என்று பெட்டியை மட்டும் உடனே மூடி விட்டான். அவன் பெட்டியைப் பார்க்கும் பொழுது கருநிறப் பேய்கள் ஒன்றையும் காணவில்லை. ஒரே ஒரு பிரகாசமுள்ள வஸ்து மட்டும் இருந்தது.

எபிமிதியனும் பண்டோராவும் அளவில்லாத துன்பமும் கவலையும் அடைந்தார்கள். அந்தக் கோரமான கூளிப் பேய்கள் தங்கள் கூரிய கொடுக்குகளால் அடிக்கடி கொட்டிக் கொடுந் துன்பம் செய்தன. வலியும் சஞ்சலமும் பொறுக்க முடியாமல் அவர்கள் பட்ட பாடு கொஞ்சமில்லை. மலை அடிவாரங்களிலுள்ள கரிய குளவிகளைப் போல அவைகள் நாலா பக்கங்களிலும் பறந்து திரிவதால் விலகிப் போகவும் வழியில்லை. அவைகளின் பயங்கரமான சப்தமோ கலங்கா மனத்தையும் கலக்கும் போலிருந்தது.

இங்ஙனம் திரியும் அவைகள்தாம் யாவை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அவைகளே தேவர்களால் அந்த

மாந்திரீகப் பெட்டியில் சிறைவைத்த துன்பமும் தியக்கமும் தரும் கூளிப்பேய்கள். மனித வர்க்கம் இது வரையும் அறியாத நோய், தீயகுணம், சுய நலம், நிட்டூரம், லோபம் முதலியவைகள். இப்பொழுதோ பண்டோராவால் விடுவிக்கப்பட்டுத் துன்பக் கலப்பே இல்லாத இன்பத்தில் வாழ்ந்த மக்களை யெல்லாம் ஒருவர்கூட விடாமல் வருத்துவதற்காகக் காப்புக் கட்டிப் புறப்பட்டு விட்டன.

நிற்க. பண்டோராவோ தன் ஆசை யெல்லாம் பாழாய்ப் போனதோடு தன் செய்கையாலே இவ்வளவு சல்லியமும் சஞ்சலமும் விளைந்ததை எண்ணி நெஞ்சு நீராய் உருகிக் கண்ணீர் விட்டுப் புலம்பினாள். இவள் தான் இப்பூவுலகத்தில் முதல் முதல் கண்ணீர் வடித்தது. இந்தக் கண்ணீர்தான் மற்ற மனிதர்களது கண்ணீருக்கும் கம்பலைக்கும் உவமையாகி முன் நின்றது.

எபிமிதியனுக்கும் அவள் தன் சொல்லை அங்கீகரியாமல் இப்பெருங் கேட்டை விளைத்தது, கோபமானாலும், அவைகளைக் கண்டிக்கவும் வெறுக்கவும் கூடவில்லை. இளமூங்கிலை வென்ற தோள்களிலும் மென்மையும் பொன் நிறமும் வாய்ந்த முதுகிலும் கால் இறங்கிய கருமேகம் போலக் கற்றை கற்றையாய் விழுந்து புரளும் கூந்தலும், சரத்கால சந்திரனது ஒளியும், தாமரையின் செந்நிறமும் முட்டையின் வடிவமும் கொண்ட முகமும், கடலினும் பெரிய கண்களும், திலோத்தமைபோலத் திருந்திய அவயவங்களும் பெற்று அம்பு உருவக்கயங்கும் மான்பிணைபோல இருந்து அழுது கரையும் அவளை யார் தான் கண்டிக்கவும் வெறுக்கவும் போகிறது ? ஆகவே அவன், மாயப்பெட்டியிருக்கிறது. அதைப் பாதுகாக்கும் கடமை தனக்கும் உண்டு என்பதை மறந்து அவளைத் தனியே விட்டுப் போனதற்காகத் தன்னையும் நொந்து கொண்டு அவள் அருகில் இருந்து துக்கத்தைச் சகிக்க முடியாமல் தானும் கண்ணீர் சிந்திப் புலம்பினான்.

இங்ஙனம் இருவரும் துக்கக்கடலில் ஆழ்ந்திருக்கும் சமயத்திலே அந்த மந்திரப்பெட்டியிலிருந்து இன்னம்

வெளிவராத அந்த ஒளி வஸ்து இவர்களை அழைத்துத் "தம்பதிகளே! நீங்கள் மட்டும் என்னை விடுவிப்பீர்களானல் உங்கள் வருத்தமெல்லாம் நீங்கிப்போகும். ஆகையால் நானும் வெளி வரட்டும். நான் எனக்கு முன் வெளி வந்த அந்தப் பேய்க்கணங்களில் ஒருவனன்று. என் வடிவமே அதை உங்களுக்குத் தெரிவிக்கும். நீங்கள் என்னை விடுதலை செய்யாமல் போவீர்களானல் நான் கருதிய நற்காரியங்களைச் செய்ய முடியாது. ஆகையால் வாருங்கள்; என்னை விடுவியுங்கள். நான் ஒருவன் தான் உங்களுக்கு ஆறுதல் தரக்கூடியவன்." என்றது.

'இதற்கு மேலுந்தான் என்ன துன்பம் வந்துவிடப் போகிறது. வந்தாலும் பார்த்துக்கொள்கிறது' என்று நினைத்து அவர்கள் திரும்பவும் அந்தப்பெட்டியைத் திறந்தார்கள். ஆனல் இந்தத் தடவை நல்ல ரோஜா நிறமுள்ள சிறு இறக்கைகளோடு ஒரு அழகிய தெய்வம் செங்கழுநீர்ப் பூவின் தாது பூசிய வரிவண்டு போல வெளி வந்தது.

பண்டோராவும் எபிமிதியனும் அதன் உருவத்தில் ஈடுபட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தத் தெய்வ வண்டு இனிய குரலில் "என் அருமைக் குழந்தைகளே! இனி நீங்கள் ஏங்கித் துடிக்க வேண்டியதில்லை. என்னைச் சற்று பாருங்கள். என் பெயர் தான் நம்பிக்கை என்பது. நீங்கள் மட்டும் என்னை விடுவியாமல் இருந்தால் எந்த மனிதனும் தனக்கு இன்று புதிதாக வந்த கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு நீண்டகாலம் வாழப் போகிறதில்லை. நான் உங்களை வேண்டுவது இதுவே. நீங்கள் என்ன வந்தாலும் அதைரியப் படவே கூடாது. உங்கள் செய்கையினலேயே இந்தப் பாலிய தசையிலேயே நீங்களும் உங்கள் இனத்தவர்களும் நோயும், துன்பமும், கவலையும் அடைந்தீர்கள். இனி இவற்றிலிருந்து நீங்கலாம் என்பதும் கூடாத காரியம். அதற்கு நான் உங்கள் கூடவே இருப்பதால் உங்களுக்குத் துன்பம் நேரிடும் பொழுதெல்லாம் 'உடுக்கை இழந்தவன் கைபோல' உதவித் திரும்பவும் புது உத்சாகமும் ஊக்கமும் தருவேன். இனி அந்தப் பேய்க்கணங்கள் தங்கள் இயற்கைக் குணங்களைக் காட்டினலும் நீங்கள் நெடு

நேரம் வருந்தப் போகிறதில்லை. நான் அருகிலேயே யிருந்து என்னிடமுள்ள அமுத தாரைகளை வர்ஷித்து அவைகள் செய்த கொடும் புண்ணை ஆற்றித் தழும்பும் இல்லாமல் செய்து விடுவேன்" என்றது.

அத்தெய்வம் சொன்ன தெல்லாம் மெய்யே. காதலர் இருவரும் முன் இருந்தபடி இல்லை. சற்று ஆறுதலோடு தா னிருந்தார்கள். அந்தச் செந்நிற வண்டு இன்னும் பூரா வும் ஆற்ற எண்ணி அவர்களைப் பார்த்து "இனியும் நீங்கள் கவலைப் படக்கூடாது. உங்கள் துன்பம் எல்லாம் என் பார்வையில் தங்கள் சுவடும் இல்லாமல் மறைந்து போயின. நீங்கள் தேவர்களுக்குச் செய்த அபராதமோ பெரிது. அப் படி இருந்தும் அவர்கள் உங்களை அடியோடு கெடுத்துவிட வில்லை. நோயும் தந்து அது தணியும் மருந்தும் தந்தி ருக்கிறார்கள். நோய் செய்யும் பேய்க்கணங்களோடு என் னையும் கூட அனுப்பிய அவர்கள் கருணைக்கு நீங்கள் கட் டாயம் நன்றி பாராட்ட வேண்டும். நாளடைவில் அந் தப் பேய்க்கூட்டங்கள் உங்களை வருத்தித் தீராப் புண்ணைச் செய்ய வந்தாலும் நான் இருக்கிறேன் அதை வேரோடு களைந்து விடுவதற்கு. பேய்களின் பிறவிக் குணம் மாறுமா? ஒரு காலும் மாறாது. அவைகள் இடை இடையே தங்கள் கூரிய கொடுக்குகளால் கொட்டத்தான் செய்யும். அந்நே ரம் என்னசெய்வதென்று அதைரியப்படாமல் சற்றே நினை யுங்கள் என்னை. அந்த க்ஷணமே வந்து உங்கள் ஆறாக் கவலையை ஆற்றி விடுகிறேன்" என்றது.

இவ்விதமாக நம்பிக்கைத் தெய்வம் சொன்ன இன்ப மொழிகள் பண்டோராவையும் எபிமிதியனையும் மிகுந்த சந்தோஷ முடையவர்க ளாக்கி விட்டன. தாங்கள் முன் அனுபவித்த அந்தக் கொடுந் துன்பங்களை அவர்கள் இப் பொழுது நினைக்கவே இல்லை. பின்னும் நாளாவட்டத் திலே அத்தம்பதிகளது இன்ப வாழ்க்கையின் இடையிலே துன்ப ஹேதுக்களான பேய்களும் தங்கள் சுபாவங்களைக் காட்டத்தான் செய்தன. அந்நேரமெல்லாம் நிழல் போலப் பிரியாது அவர்கள் அருகிருந்த நம்பிக்கை எனனும் சிநேகி தன் அவர்களைப் பார்த்துக் "கவலை வேண்டாம், நல்ல

காலம் இன்னும் சமீபத்திலேயே யிருக்கிறது. அந்த நல்ல நாள்களை இழந்து விடாதீர்கள்" என்று சொல்லித் தேற்றத் தேறி வாழ்ந்து வந்தார்கள்.

வாசகர்களே ! ஒரு குற்றமும் செய்யாத இந்தப்பெண்ணுக்கும் பிள்ளைக்கும் இன்னும் அவர்கள் இனத்துக்கும் அந்தத் தேவர்கள் சுவர்ப்புறம் கோலம் செய்து ஏன் இக் கொடுந் துன்பங்களை சிருஷ்டிக்கவேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். வெயிலின் கொடுமையை அனுபவியாதவனுக்கு நிழலின் அருமை தெரியப் போகிறதில்லை. இருளில் வசித்தவனுக்கே ஒளியின் பெருமை தெரியும். வாடைக் காற்றில் நீங்கள் வருந்தியதினால் தென்றல் காற்றின் பூரண சுகம் உங்களுக்குத் தெரிகிறது. நாள் தோறும் பாலே பருகி வருகிறவன் இடை இடையே கூழையும் குடித்தால் தான் பாலின் சுவையை உண்மையாகத் தெரிவான். நமது வாழ்க்கையிலும் துன்பங்கள் விரவி வரும் பொழுது தான் இன்பத்தின் பூரண ருசி நமக்குத் தட்டுப்படுகிறது. துக்கமே இல்லாமல் இருந்தால் சுகத்தின் உண்மை உருவம் விளங்காமலே போய்விடும். ஆகவே, நாம் இன்பத்தின் அதி சூக்ஷ்ம வடிவத்தைக் கண்டு அனுபவிக்க வேண்டுமென்ற பெரு நோக்கத்தோடு தான் தேவர்கள் துன்ப ஹேதுக்களான பேய்களை அனுப்பி யிருக்கிறார்கள். இதனால் அவர்களை இச்செயலுக்காகக் குறை ஒன்றும் சொல்லாமல் அவர்களுக்கு நம் மனமார்ந்த வாழ்த்துரையைச் சமர்ப்பிப்போமாக.

'நம்பல் என்பதுவே அன்பின் நிலைமை' (மனோன்மணீயம்).

முற்றும்.

“ஆரம்ப யோகம்”

நான்கு விஞ்ஞான வழிகள்.

சாதாரண அறிவுக்கு அசாத்திய மான விஷயங்கள் விஞ்ஞான அறிவிற்குச் சாத்தியமாகி வருவதை நாம் பார்க்கிறோம். விஞ்ஞான அறிவு பயிற்சியாலேயே பயன் படும். பயிற்சி அல்லது அப்பியாச மற்ற விஞ்ஞான ஆராய்ச்சி பயன்பட மாட்டாது. எங்ஙன மெனின்:— ஆகாய விமானத்தை உண்டாக்கி வான் வெளியில் பிரயாணம் செய்ய லாம் என்றறிந்த ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி வல்லவன் இவ்வுத்தே சத்தைச் செய்து பார்த்தே பயனடைய வேண்டியவ னுகிறுன். இன்றேல் அவனது ஆராய்ச்சி பயனற்ற தாகின்றது.

இங்கிலாந்து தேசத்தின் பிரபல விஞ்ஞான சாஸ்திரியான ஸர் ஒலிவர் லாட்ஜ் (Sir Oliver Lodge) என்பவர் எதிர்ப்பற்ற விஞ்ஞா னியே யாவார். ஆனுல் அவர் அனுபவசாலி யல்லர். ஆராய்ச்சியின் முடிவுகளையும் வழிகளையும் உலகத்தாருக்குத் தெரிவிப்பவரே யன்றி செய்து காட்டுபவ ரல்ல. ஆகவே அவரது ஆராய்ச்சியில் சிறிது தப்பி தங்க ளிருக்கலாம். மற்றொரு புரம் அமெரிக்காவின் பெரிய விஞ்ஞானி யான ஸ்ரீயுத. எடிஸன் (Mr. Edison) விஞ்ஞானத்திலும் அப்பியா சத்திலும் தேர்ந்தவர். இப்பெரியார் தன் கலைத்திறத்தால் ஆராய்ந்து கண்டு பிடித்த விஷயங்களைத் தானே இரகசியமாகச் செய்து பார்த் துப் பின்னர் உலகத்தாருக்குத் தெரியும்படி செய்து காட்டக் கூடிய வர். ஆகவே இவரது ஆராய்ச்சியில் தப்பிதங்கள் பெரும் பாலும் நிவர்த்தியாகி விடுகின்றன. ஆக இவ் விரு வகை விஞ்ஞானிகளும் உலக ஞானத்திற்கு அவசியமானவர்க ளென்றே கொள்ளற் பால தாகும்.

பொதுவாக மேல் நாட்டார் இவ்வாறே கொள்வது வழக்க மெனினும் கீழ் நாட்டாராகிய நாம் இவ்வாறு அங்கீகரிக்கும் வழக்க மில்லை. ஆராய்ச்சி, பயிற்சி ஆகிய இவ்விரண்டிலும் தேர்ந்தவர் களையே விஞ்ஞானிகள் என்று ஒப்புச் கொள்வது வழக்கமாக விருக் கிறது. ஏனெனில் ஆராய்ச்சியும் அப்பியாசமும் முற்காலத்தில் நம் நாட்டில் இலகுவாக விருந்தன. மேல் நாட்டிலோ இவ்விரண் டும் கஷ்ட சாத்திய மாக விருந்தன.

வரவரப் பிற்காலத்தில் நம் நாட்டின் கலைத்திறம் மங்குத லடை யவே ஆராய்ச்சியும் அப்பியாசமும் படிப்படியாக மங்கத் தொடங்கி இரண்டுமே தற்போது அழிந்து போய் விட்டன. மேல் நாட்டிலோ முதலில் கலைத்திறம் வளரத் தொடங்கி அதை யடுத்து ஆராய்ச்சியும் அப்பியாசமும் வளர்ந்து கொண்டே வருகின்றன. தற்போதைய மேல் நாட்டு நிலைமை ஆராய்ச்சியும் அப்பியாசமும் வேறு வேருக விருப்பினும் சிறிது காலத்திற்குள் இரண்டும் பிரிக்கப் படாத நிலைக்கு வந்து விடும் என்று தெரிவதற் கான அறிகுறிகளை நாம்

தற்போது பார்க்கிறோம். இதன் மேல்தான் ஐரோப்பிய கலைவன்மை இந்தியாவின் பூர்வீகக் கலைவன்மையைப் போல் பூரண நிலையை அடையப் போகின்றது.

மேலே கண்ட விஷயங்களைப் படிக்கும் நமது நண்பர்கள் இந்தியாவில் மேலே கூறியபடி சம்பூரண கலைத்திறம் நிரம்பி யிருந்ததாகக் கூறுவது நிஜமா என்று சந்தேகப் படலாம். ஆனால் அவ்வாறு சந்தேகப்பட நியாயமில்லை. இந்திய கலை ஞானங்களின் சரித்திரங்களை ஆராய்ச்சி செய்த தற்கால வித்வான்கள் பலரும் நமது பூர்வீக கலைத் திறங்களைப் பற்றி மிகவும் புகழ்ந்திருக்கிறார்கள். நானும் சந்தேகப் பட்டவர்களில் ஒருவனாக இருந்தே, எனது சிற்றாராய்ச்சியால் எனக்கிருந்த நினைப்புகள் பொய்மையானவை யென அறிந்து கொண்டேன்.

நம் நாட்டில் பூர்வீகத்தில் அபிவிருத்தியாகி யிருந்த பலவித கலைகளையும் தற்காலத்தில் தோன்றும் பல்லாயிரம் அடையாளங்களால் நாம் காணலாம். உதாரணமாக அபாரமாக விருத்தியாயுள்ள இலக்கிய இலக்கணக் கலைகளையும், தத்துவ ஞானக் கலைகளையும், சித்திரக் கலை விருத்தியையும் பதார்த்த தத்துவ விவரண சாஸ்திரப் பெருக்கையும் நாம் எங்கும் பார்க்கிறோம். இந்தப் பழங் கலைகள் பழைய அஸ்திபாரங்களிலிருந்து தற்போது மறுபடியும் தழைத்து வருகின்றன.

அன்றியும் மற்றொரு பென்னம் பெரிய விஞ்ஞான கலை இன்னமும் மங்காது இருந்து வருவது ஆச்சரியப் படத் தக்கதாகும். அக் கலையே "யோக வித்தையாகும்."

இந்த யோக வித்தை மனிதர் பாக்கியங்களிலும் கலைகளிலும் ஆராய்ச்சிகளிலும் எவ்வளவு தூரம் சம்பந்தப் பட்டிருக்கிறதென்பதை விவேகிகள் நன் கறிவார்கள். அன்றியும் இப்பேராய்ச்சி மற்றொரு முக்கிய மனித நிலைக்கு அஸ்திபார மாகவும் ஆதாரமாகவு மிருந்து வருகிறது. அதுதான் "ஜீவ நிலை" என்று கூறப்படுவது. ஜீவ நிலைக்கு யோக வித்தையும், யோக வித்தைக்கு ஜீவநிலையும் இன்றியமையாத தாகும்.

ஜீவ நிலையில் யோகம் செய்திருக்கும் அற்புத விருத்தியை ஆராய்ச்சி வல்லவர்களில் சிலரே அறிந்திருக்கிறார்கள். பல விஞ்ஞானிகளும் அறிவார்களானால் இவ்வுலகம் புதிய விஞ்ஞான உலகமாக விளங்கும் என்பதை நாம் கூறவேண்டிய தில்லை.

இந்த யோக வித்தையானது அறிவீனத்தில் விஞ்ஞானமும் பிணியில் சுகமும் அற்பாயுளில் பூரணாயுளும் தருவதைத் தற்போது மேல் நாட்டு விஞ்ஞானிகள் மிக வேகமாக அறிந்து வரத் தொடங்கி விட்டார்கள். ஆகையால் இனி நாம் அசிரத்தையாக இருக்க ஞாயமில்லை.

இவ் வித்தையை மிக வேகமாகவும் ஆழ்ந்தும் கைப்பற்ற வேண்டியது ஒவ்வொரு இந்தியனது கடமையு மாகும்.

இந்தப் பெரு நோக்கம் கொண்டே ஆரம்ப அறிகுறியாக இந்தச் சிறு வியாசம் எழுதப்படுகிறது. நம்மவர்கள் கவனம் செலுத்துவதாகத் தெரிந்தால் பின் விரிவான தத்துவங்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டு போக நமக்கு உற்சாக முண்டாகும்.

ஆரம்ப யோகம்.

தாழ்ந்த பரீக்ஷைகளில் வெற்றி பெற்றவனே உயர்ந்த கலாசாலை வித்தைகளுக்கு அருகனாவது போல ஆரம்பயோகத்தின் படிகள் அனைத்தையும் ஜெயத்துடன் வென்றாலன்றி ராஜ யோகம் முதலிய மேல் படிகளைச் சேருதல் அசாத்திய மாகும் என்பதைப் படிப்போர் அறிய வேண்டும்.

இந்த ஆரம்பப் படிகள் யாவும் ஜீவ நிலையை விருத்தி செய்வதில் மட்டும் ஈடு பட்டு நிற்கின்றன. ஜீவ நிலை விருத்தியாவதால் யோக சாதனத்துக்கு முதல் முதலில் வேண்டிய சகல ஆரம்ப ஏற்பாடுகளும் தானே பூரண நிலையை யடைந்து விடுகின்றன.

யோகத்தின் ஆரம்பத்தில் வேண்டியவை முக்கியமாக இரண்டாகும். அவை :—பரிசுத்தமும், சக்தியுமே. பரிசுத்தம் இல்லாத இடத்தில் சக்தி தங்குவதில்லை. பரிசுத்தம் சக்தியால்தான் உண்டாக வேண்டும். ஆனால் சக்திக்குத் தடையாயுள்ளவைகள் நீக்கப் பட்டாலன்றி சக்தி தங்குவது கஷ்டம். சக்திக்குத் தடையாயுள்ளவை முக்கியமாக மூன்றாகும். அவை :—அழுக்கு, நோய், விருத்தாப்பியம் :

இந்த மூன்று பெரிய பகைகளையும் நீக்குவதே ஆரம்ப யோகத்தின் வேலை என்று அறிய வேண்டியது.

இதற்காக நம் நாட்டு முற்கால விஞ்ஞானிகள் சிறந்த வழிகளைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த வழிகளைத் தற்கால மேல் நாட்டு விஞ்ஞானிகள் ஆட்சேபனையின்றி ஒப்புக் கொண்டிருப்பதுடன் தாங்களும் அவைகளின் உண்மைகளைக் கண்டு கொண்டு அனுஷ்டிக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்த ஆச்சரியமான உண்மையைத் தெரியப் படுத்துவதற்காகவே இந்த முதல் வியாசத்தை நமது 'லக்ஷ்மி' மூலமாக வெளியிடத் துணிந்தேன். இவ்வுண்மையைப் படிக்கும் சகோதரர்களும் சகோதரிகளும் நன்குணர்ந்து தாங்களும் அனுஷ்டித்து விஞ்ஞான அறிவையும், தேக சுகத்தையும், பூரண ஆயுளையும் பெறுவார்களென்று நம்புகிறேன்.

முதல் விஞ்ஞான வழி.

"பிராணப் பயிற்சி"

குயவனால் செய்யப்படும் மண் பாத்திரங்கள் அக்கினியால் எரிக்கப் பட்டாலொழிய பயன் படுத்தத் தகுதியுள்ளதாக மாட்டாத

வாறு போல், அழுக்குகளால் கவரப்பட்ட தேகம், பிராணவாயுவாகிய அக்கினியால் எரியப்படல் வேண்டும். எரிந்த பின்னரே தேகம் பலமுள்ளதாகவும் ஸ்திரமுள்ளதாகவும் ஆகிறது. ஆகவே பிராணவாயுவைத் தினந்தோறும் தேகத்திற்குள் சிறிது சிறிதாகப் பிரயோகப் படுத்தல் வேண்டும். தேக அழுக்குகள் சிறிது சிறிதாக எரிக்கப் படல் வேண்டும்.

தேகத்திற்கு அழிவை யுண்டாக்குவது ஒரே நிலைதான். அந்த நிலைதான் குளிர்ச்சி எனப்படும், இக்குளிர்ச்சியாலேயே இரத்தம் குளிர்ந்து பனிக்கட்டியாக ஓட்டமற்று நின்று விடுகிறது. அப்படி நிற்பதால் நரம்புகளும் எலும்புகளும் மாமிச பிண்டமும், சருமமும் பலஹீன மடைந்து வருவதற்குக் காரணமாகிறது. இதையே வியாதி அல்லது நோய் என் றழைக்கின்றோம்.

இந்த நிலையை மாற்று வதற்கு எந்த ஔஷதத்தாலும் ஆகமாட்டாது. எவ்வித தேகப்பயிற்சியாலும் ஆக மாட்டாது. ஆனால் ஔஷதங்களால் பிரதி கூலமும், தேகப் பயிற்சியால் மிகச் சிறிய நன்மையும் உண்டாகின்றன.

ஆனால் வெளியில் சாதாரண வாயுவில் கலந்திருக்கும் பிராண வாயுவை தேகத்திற்குள் இழுத்துக் கிரகித்து அவ்வாயுவை ஜீரணமாக்கி வந்தால் பிராணவாயுவின் அக்கினியான வெப்பத் தன்மையால் தேக அழுக்குகள் எரியப் பட்டுச் சாம்பராய் மேலே கூறப்பட்ட இரத்தம், மாமிசம் நரம்புமண்டலங்கள், என்புக் கூட்டங்கள், சருமம் முதலிய வற்றிற்கு வெப்பம் அளிக்கப் பட்டு இரத்த ஓட்டம் மறுபடியும் உண்டாகி, அழிந்த பாகங்கள் புதுப்பிக்கப் படும். பின்னர் மறு சிருஷ்டி யுண்டாகிறது.

இந்த ரகசியத்தை உலகத்தில் முதல் முதல் கண்டு பிடித்தவர்கள் இந்தியர்களே யாவார்கள். தற்போது இந்த நாகரீக உலகத்து விஞ்ஞான சாஸ்திரிகளால் இது மனம் ஒப்பி அங்கீகரிக்கப் படுகிறது. இம்முறை ஐரோப்பிய நாடுகளில் தற்போது விஞ்ஞானிகளால் அனுஷ்டிக்கப் பட்டு வருவதை நாம் பார்க்கிறோம்.

ஆகையால் இந்தப் பிராண வாயுவைக் கிரகிக்கும் வித்தையை ஒவ்வொரு ஆணும், பெண்ணும், முதியோரும், இளையோரும் அப்பியசித்துவர வேண்டும். இங்ஙனம் செய்வதால் பல்லாயிர வருடங்களாக நாம் செய்துவந்த அல்லது நமது முன்னோர்களால் செய்யப் பட்டு வந்த, இயற்கை விரோதமான அக்கிரம கருமங்களால் ஏற்பட்ட சக்திஹீனம், நோய்கள், விருத்தாப்பியம், பாலிய மரணம் அறிவீனம் முதலிய கொடுமைகள் நிவர்த்தியாகும். இதன் பலன் சங்கிரகமாக நீண்டாயுளும் விஞ்ஞான அறிவும் என்க.

இந்த அப்பியாசத்தை ஆரம்பத்தில் தினசரி காலை வேளையில் நிரம்பச் செய்து வரல் வேண்டும். நாளாக ஆக நோய்கள் அகல்

வதையும் சகல தேக நிலைகளும் நிதானத்திற்கு வருவதையும் கவனித்து காலை மத்தியானம், இரவு, அல்லது இஷ்டமான போது செய்து வரலாம். இதுவே முதல் முறையாகும்.

சூரிய ஸ்நானம்.

சூரிய ஒளியே ஜீவன் என்ற உண்மையைப் பற்றி "சூரிய விஞ்ஞானம்" என்ற தலைப்பின் கீழ் நமது "லக்ஷமியில்" சென்ற ஆண்டு சில விசேஷ வியாஸங்கள் நாம் எழுதியிருந்ததை படிப்போர் அறிந்திருக்கலாம். ஆகவே அதே தத்துவ உண்மைகளை இங்கு மறுபடியும் கூற நாம் விரும்பவில்லை. எனினும் சூரியப்பிரகாசத்தை மனிதர்கள் எவ்வாறு கிரகிப்பது என்பதைப் பற்றி மட்டும் இங்கு சிறிது கூறலாம்.

ஆரம்ப யோகத்தை அப்பியசித்துப் பலத்தையும் பூரணயுளையும் விரும்பும் ஒவ்வொருவரும் தினசரி பகல் பன்னிரண்டு மணி அல்லது ஒரு மணிக்குள், வெய்யில் கால மானால் பதினொரு மணிக்குள் இந்தச் சூரிய ஸ்நானத்தைச் செய்தல் வேண்டும். தினசரி தவறாமல் செய்வதே சூரிய ஸ்நானம் என்றழைக்கப் படும். சூரியன் பிரகாசிக்காத தினங்களில் செய்யாமல் நிறுத்தி மறுநாள் அந்த அளவையும் சேர்த்துச் செய்தல் வேண்டும்.

ஆனால் வெய்யிலில் அலைந்தும், காட்டில் வேலை செய்தும், கூலி வண்டியிழுத்தும், மூட்டை தூக்கியும் பிழைப்பவர்களுக்கு இந்த சூரிய ஸ்நானம் வேண்டியதில்லை. தேகப் பிரயாசைப் பட்டு வேர்வை வரப் பாடுபடாதவர்களுக்கே இந்த சூரிய ஸ்நானம் அவசியமாகும். அந்த அற்பாயுளுள்ள நாகரீகர்களுக்கே இந்த ஸ்நானம் இன்றியமையாததாகும். வெயர்க்கும் உழைப்பாளிகளுக்கு வேண்டுவதில்லை. ஆனால் முதலாவது அப்பியாசமும் இனிமேற் கூறப்படும் இரு அப்பியாசங்களும் எல்லோருக்கும் எப்பொழுதும் வேண்டும். அன்றியும் சூரிய ஸ்நானம் குறிப்பிட்ட நேரத்தில் தனியிடத்தில் நிருவாண தசையில் இருந்து எடுப்பதே முறையாகும். தேகத்தில் வஸ்திரங்களைத் தரித்துக் கொண்டு சூரிய ஸ்நானம் எடுப்பது எப்பொழுதும் பயன்பட மாட்டாது. தேக பரிசுத்தத்திற்காக சூரிய ஸ்நானம் செய்யப்படுவதாக நினைத்தே அதே ஏகாக்கிர சித்தத்துடன் சூரிய ஸ்நானம் செய்யப் படல் வேண்டும்.

இவ்வாறு நிருவாணமாக சூரிய ஸ்நானம் செய்யச் சாத்தியப்படாத போது தேகத்தில் மிகவும் சிறிய அளவான வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு செய்தல் உத்தமமாகும் என்று அறிய வேண்டியது.

முக்கியமாக ஸ்திரீகள் நிருவாணமாக இருந்தே சூரிய ஸ்நானம் செய்ய வேண்டிய மிகவும் அவசியம் என்பதை மறத்தல் கூடாது. ஏனென்றால் பெரும் பாலும் பெண்கள் தங்கள் அங்கத்தை

மறைத்தே வாழ்ந்து வருவதால் அவர்கள் பலஹீனம் நீங்குவதற்கு நிருவாண சூரிய ஸ்நானம் மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் காலம், இடம் இவைகளின் கஷ்டத்தால் சாத்தியப்படாதபோது மிகவும் லேசானதும் சிறிய அளவுள்ளதுமான வஸ்திர தாரணத்துடன் செய்வது மிகவும் நலம் என்றறிக. சூரிய ஸ்நானத்தின் கால அளவு முக்கியமாகக் கவனிக்கப் படல் வேண்டும். கால அளவைக் கவனிப்பதில் வெய்யில் சாலத்தில் உடல் முழுவதும் நன்றாக வேர்த்து வெயர்வை வடியும் வரையிலும்; பனிக் காலத்தில் வெயர்வை வடியத் தொடங்கியவுடனும் நிறுத்தப் படவேண்டும் என்று அறிய வேண்டும்.

சூரிய ஸ்நானத்தில் மற்றொருவிஷயம் கவனிக்கப் படல் வேண்டும். அது எதுவெனில்:—கால அளவின் பேர் பாதியை நெஞ்சின் புறமும் மற்றொரு பாதியை முதுகின் புறமாகவும் உபயோகித்தல் வேண்டும். இவ்விரண்டு புறங்களிலும் வெயர்வை அரும்பும் வரையில் பொறுப்பது உத்தமம் என்று பொதுவாக அறிய வேண்டியது.

இந்தப் பெரிய உண்மையான ஆழ்ந்த விஞ்ஞான ரகசியத்தை நம்மவர்கள் பல்லாயிர வருஷங்களுக்கு முன்பே நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பதை நம்மவர்கள் அறிய வேண்டியது. சூரிய நமஸ்காரத்தை தினசரி செய்ய வேண்டும் என்று விதித்திருப்பதின் உண்மையே இதை விளக்கும். அன்றியும் மநுதரும சாஸ்திரத்தில் “மனிதனுடைய தேகத்தில் சூரிய ஒளி படாத பாகத்தை விரலாலாயினும் கரத்தாலாயினும் தொட்டால் தொட்ட விரலையோ கரத்தையோ ஜலத்தால் கழுவுதல் வேண்டும்” என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே சூரிய ஸ்நானத்தின் உண்மையை இதனால் நன்கு அறிதல் வேண்டும். இதுவே இரண்டாவது வழியாகும்.

தூக்க நீக்கம் அல்லது விழிப்பு.

மனித வாழ்வில் தூக்கம் ஒரு கெட்ட வழக்கமே யன்றி அவசியமானதன்று. அன்றியும் அது வீண் போகமேயாகும். நோய்க்கும் அற்பாயுளுக்கும் முதல் காரணம் நித்திரைதான் என்பதை நம் முன்னோர்கள் நன்கு அறிந்தார்கள். தற்கால மேல் நாட்டு விஞ்ஞானிகளில் கற்றுச்சொல்லிக ளன்றி தீர்க்கவிஞ்ஞானிகள் சகலரும் தூக்கம் மிகவும் கேடான வழக்கத்தை மட்டும் ஆதரவாகக் கொண்டதென்று நன்கு அறிந்து வருகிறார்கள். தூக்கத்திற்கும் ஜீரணக் கருவிகளுக்கும் யாதொரு ஸ்நானப் பிராப்தியும் இல்லை என்று ருஜுப்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதன் தவிர மற்ற எந்த ஜீவராசியும் இரவிலோ பகலிலோ தூங்குவதேயில்லை யென்றும் கேவலம் ஓய்வு மட்டும் எடுத்துக்கொள்வதாகவும் தெரிகிறது. இந்தத் தூக்கமானது சென்ற இரண்டு அல்லது இரண்டரை லட்ச வருஷங்களாக மனிதர்களைப் பற்றியதே யன்றி அதற்கு முன் மனிதர்களுக்குள் இருந்ததில்லை யென்று நன்கு தெரிகிறது.

தூக்கத்தினால் இரத்தம் குளிர்ந்து ஓட்டம் குறைந்து பலஹீனம் அதிகப் பட்டு இளம் விருத்தாப்பியமும், மரணங்களும் உண்டாகி மானிட சமூகம் நசித்து வருவதை யாவரும் பார்க்கலாம்.

இத் தூக்கத்தின் கேடுகளைப் பற்றியும் தூக்க நீக்கத்தா லுண்டாகும் நன்மைகளைப் பற்றியும் குருகுல "பால பாரதியிலும்" "ஸ்ரீராம கிருஷ்ண விஜயத்திலும்", மற்றும் பல பத்திரிகைகளிலும் சென்ற வருஷத்தில் பல பிரபல வியாசங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறோம் ஆகையால் மறுபடியும் அதே விவரங்களை இங்கு நாம் கூறப் போவதில்லை. மேலே கூறியுள்ளதே போதுமென விட்டுத் தூக்க நீக்கத்தை எவ்வாறு அப்பியசித்தல் வேண்டும் என்பதை இங்கு விவரிப்போமாக.

நாம் கீழே கண்டவாறு சிறுகச் சிறுக அப்பியாசம் செய்து சில வருஷங்கள் கூடியாவது தூக்கத்தை அடியோடு விட்டு விட்டோமானால் மானிட சமூகத்தைத் தற்போது பிடித்திருக்கும் நோய்களும் அறிவீனமும் நீங்கிப் பூரணயுளையும் விஞ்ஞானத்தையும் பெறலாம் என்பதைப் படிப்போர் அறிய வேண்டியது.

பல விஞ்ஞானப் பரிசீலனைகளால் அறிந்திருக்கிறபடி வாரம் ஒன்றுக்கு ஐந்து நிமிஷம் வீதம் தூக்கத்தைத் தள்ளிவைத்துப் பழகி வந்தால், மேலும் கீழுமாக இறங்கியும் ஏறியும் வந்து சற்றேறக் குறைய இருபது வருஷங்களுக்குள் தூக்கத்தை அடியோடு நாம் ஒழித்து விடலாம். இவ்விதம் அடியுடன் ஒழிக்கப்பட்ட தூக்கம் பின் நம்மையும் நமது சந்ததியையும் தொடரவே மாட்டாது.

ஆகையால் நமது ஆரம்ப யோக அப்பியாசிகள் தூக்கத்தைச் சிறுகச் சிறுக ஒழித்து விடப் பழகுதல் வேண்டும். "அனந்த லாட்டல்" என ஔவைப் பிராட்டியாரும்,

> "துஞ்சினார் செத்தாரில் வேறல்லர் எஞ்ஞான்றும்
> நஞ்சுண்பார் கள்ளுண் பவர்."

என நாயனாரும் கூறியிருப்பதை நம்மவர் கவனிப்பார்களாக. இதுவே மூன்றாவது வழி என்றறிக.

உபவாசம் அல்லது பட்டினி.

உபவாசம் ஒரு தெய்வத் தன்மையான ஔஷதமாகும். அது ஒரு தவ நிலைமையை மனிதனுக்குள் உண்டாக்குவதை விவேகிகள் நன்கறிவார்கள். உபவாசத்தை அநுஷ்டித்து அனுபவித்தவர்களே உபவாசத்தின் அற்புத குணங்களை யறியக் கூடும்.

மனித வாழ்வைப் பரிசுத்தப் படுத்தவும் விஞ்ஞானத்தை வளர்க்கவும், பிராண அனலை அடிக்கடி யௌவனப் படுத்தவும், மேதாவிகள் இதை ஆயுதமாகக் கொண்டிருக்கிறார்கள். வைத்தியர்களும், நோயாளிகளும் உபவாசத்தால் சுகத்தையும் சாந்தியையும் அடைகிறார்கள்.

அன்றியும் மஹாத்மா காந்தியடிகள் போன்ற கலியுக மஹரிஷிகள் உபவாசத்தைத் தரும ஸ்தாபனத்திற்காகவும் சகல காரிய சித்திக்காகவும் உபயோகித்து வெற்றி யடைகிருர்கள்.

உபவாசத்தைப் பற்றியும் பல வியாசங்களை அப்போதைக் கப்போது நாம் பல பத்திரிகைகளுக்கு எழுதி வெளியிட்டிருக்கிறோமாகையால் இங்கு ஆரம்ப யோகத்திற்கு உபவாசத்தை அனுஷ்டிக்கும் முறைகளைப் பற்றி மட்டும் சிறிது பிரஸ்தாபிப்பது உசிதம் என்று நினைக்கிறோம்.

நீண்டாயுளையும் பரிசுத்த வாழ்வையும் யௌவனத்தையும் அறிவின் பிரகாசத்தையும் விரும்பிய நமது ஆரம்பயோகிகள் உபவாசத்தை வாரம் ஒரு நாள் தவருமல் அனுஷ்டித்து வரவேண்டும்.

மஹாத்மா மௌன தினத்தை அனுஷ்டித்து வருவது போல் வாரத்தில் ஒரு குறிப்பிட்ட தினத்தில் சுத்த உபவாசத்தை அனுஷ்டித்து வருவது முக்கிய விதியாக வைத்துக் கொள்ள வேண்டும். அந்தத் தினத்தில் ஒவ்வொரு வாரமும் தவருமல் உபவாசம் இருந்துவிடவேண்டும்.

அன்று தினம் வழக்கம் போல் சகல வேலைகளையும் செய்து வந்தாலும் யாதொரு விதமான ஆகாரத்தையும் கொள்ளக் கூடாது. இரவும் பகலும் இந்த விரதத்தை அனுஷ்டித்துப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

தேவை நேரிட்டால் போதுமான அளவு சுத்த ஜலத்தை மட்டும் அருந்தலாம். ஜலத்துடன் யாதொரு பதார்த்தத்தையும் சேர்த்தல் கூடாது. வெற்றிலை, புகையிலை, காபி, டீ, முதலியவைகளும் அருந்தல் கூடாது.

இந்தத் தெய்வ ஔஷதம் ஒரு தவமாகக் கருதப்படல் வேண்டும். இதை யனுஷ்டிப்பதில் யாதொரு சிரமமும் இருக்க மாட்டாது. ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் சிறிது ஆயாசம் போலவும் சிரமம் போலவும் தோன்றக் கூடும். சிறிது வைராக்கியமும் பிடிவாதமும் கைக்கொண்டு அந்த இரண்டொரு வாரங்களைப் பூர்த்தியாக நிறைவேற்றி விட்டால் பின்னுள்ள வாரங்களில் உற்சாகமும் ஊக்கமும் உண்டாகி விடும்.

தீராத ரோகங்களால் கஷ்டப் பட்டுக் கொண்டு வைத்தியனையும் ஔஷதங்களை சதா பின்பற்றித் திரியும் நம் நாட்டுப் படித்த சகோதரர்களும் சகோதரிகளும், யௌவனத்தையும் நீண்டாயுளையும் விரும்பும் விருத்தாப்பியர்களும் மற்றும் சகலரும் இந்தத் தெய்வ முறையைப்பழகித் தங்கள் பழக்கத்திற்குக் கொண்டு வந்து விட்டால் எப்பொழுதும் சுகதேகிகளாகவும் ஆனந்த முள்ளவர்களாகவும் இருப்பார்கள் என்பதில் ஆட்சேபனை யில்லை.

உபவாசத்தை அனுபவித்து ஆனந்த மடைந்து வரும் எம்மைப் போன்றவர்கள் அவ்வுபவாசத்தில் உத்கிருஷ்ட பலன்களை எடுத்துக்

கூற பாஷையில் வார்த்தைகள் இன்றித் தவிக்கிறோம் என்று சுருங்கக் கூறி இத்துடன் முடிப்பது உத்தமம் என்று நினைக்கிறோம். இதுவே நான்காவது விஞ்ஞானவழியாகும்.

முடிவுரை.

மேலே விவரித்துள்ள வண்ணம், பிராணுயாமம், சூரிய ஸ்நானம் தூக்க நீக்கம், வார உபவாசம் ஆகிய நான்குவித விஞ்ஞான வழிகளையும் ஆரம்ப யோகிகள் அல்லது இவ்வுலகத்தில் சுகத்தையும் வியாதி நீக்கத்தையும் நீண்டாயுளையும், சக்தியையும் விரும்பிய சகோதர சகோதரிகள் ஒவ்வொருவரும் அனுஷ்டித்து விஞ்ஞான வாழ்வின் ஆனந்தத்தையடைய வேண்டும் என்பது எமது விருப்ப மாகும். ஆரம்பில் இந்த நான்கு முறைகளையும் ஏக காலத்திலேயே ஆரம்பித்துத் தங்கள் ஆயுள் முழுவதும் அனுஷ்டித்துச் சுகித்து வருவது உத்தமமாகும். அன்றேல்.

முதலாவது விஞ்ஞான வழியோடு இரண்டாவதையோ, மூன்றுவது நான்காவது விஞ்ஞானத்தையோ ஒன்றை மட்டும் சேர்த்து இரண்டுடன் ஆரம்பித்து வரவரத் தாமே ஒவ்வொன்றையும் நாளாவர்த்தியில் சேர்த்துப் பழகி வருவதும் உத்தமமாகும்.

இவ்வுத்தம விஞ்ஞான முறைகளை மேல் நாட்டார்களில் முக்கியமாக அமெரிக்கர்களும் ஜர்மனியர்கள் அனுஷ்டித்து வரத் தொடங்கி விட்டார்கள். இம்முறைகளுக்குப் பிதாக்களான நாம் நிராக்ஷேபனையாக அனுஷ்டித்து விஞ்ஞான வாழ்வையும் நீண்டாயுளையும் அடையப் பின்வாங்குதல் கூடாது. இதுவே எமது உபதேச மாகும். நம் நாட்டாருக்குப் பூர்விக சக்தியும் தவவலியும் மனே திடமும் உண்டாக வேண்டுமானல் இம் முறைகளே விவேக முள்ளவைகள் என்று நிராட்சேபனையாக நாம் கூறுவோம். இதை உத்தேசித்தே திருவள்ளுவரும், திருமூலரும், ஔவைப் பிராட்டியாரும் கீழே கண்டவாறு கூறியுள்ளார்கள்.

திருமூலர் திருமந்திரம்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

வள்ளுவர் குறள்.

“ துஞ்சினர் செத்தாரில் வேறல்ல எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள் ளுண்பவர்.”

ஔவைப் பிராட்டி.

“ அநந்தலாடேல் ”

வந்தே மாதரம்.

பா. ஆதிமூர்த்தி, காசி.

பா னு பா ய்.

IV

(ஸ்ரீமான் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது.)

236-வது பக்கம் (தொடர்ச்சி.)

அநந்தராய் அவ்வாறு சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில், காலு சர்தார் " எசமானரே ! இவ்வேளைக்கு ஏதேனும் கட்டளை யுண்டோ? என்றான்.

" காலு ' இம்மெல்லியலாளை எனது ஞானசாரியராகிய சிரோமணி மகாசாரிடத்திற்குக் கொண்டு போதல் வேண்டும். இவள் மிகவுங் களைப்படைந்து நடந்து செல்லக்கூடாதவளாயிருக்கின்றாள் ; ஆகலின், இவளுக்கொரு சிவிகை கொண்டுவா " என்றான்.

அதனைக்கேட்ட காலு "ஐயனே! இதோ வந்து விட்டது" என்று கூறி ஐந்தாறு மனிதரை அனுப்பினான். அவர்களும் சில நிமிஷங்களுக்குள் சிவிகை யொன்று கொண்டு வந்தனர். பானுபாய் இன்னும் நல்லுறக்கத்தி லிருந்தாள். அநந்தராய் அமைதியாக அவளருகிற் சென்று மலர் வல்லி யனைய அவ ளுடம்பைத் தொட்டு அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான்.

சடுதியிற் கூப்பிட்ட சத்தத்தினால், அவள் திடுக்கிட்டு அருண்டெழுந்து விழித்து நால் மருங்கும் பார்த்தாள். தான் எங்கிருந்தாளென்பதுந் தெரிந்து கொள்ளக்கூடாமல் கலக்க முற்றாள்.

அநந்தராய் அமைதியோடும் அன்போடும் " பானு ! இனி நீ நடந்து செல்ல வேண்டியதில்லை. இதோ உனக்குச் சிவிகை யிருக்கின்றது. நீ அதனுள் ஏறிப்போகலாம் " என்றான்.

பானு " நான் எங்கே போகலாம்?" என்று கேட்டாள். அநந்தன் " எனது குருவின் வீடு சமீபத்தி லிருக்கின்றது. உன்னை அவருடைய பாதுகாப்பி லிருக்கும்படி அவரிடம் விடப்போகின்றேன் " என்று கூறினான்.

அதற்குப் பானுபாய் ஒன்றுங் கூறவில்லை. அநந்தராய் அவளைச் சிவிகையி லேற்றினான். அதனை நான்கு கொள்ளைக்காரர் தூக்கிச் சுமந்து சென்றனர். மற்றையர் கைகளிற் றடிகளைத் தூக்கிப் பிடித்து மெய் காப்பாளராகச் சென்றனர். அநந்தனும் அவர்களைப் பின் தொடர்ந்தான். அவர்கள் அடவியை விட்டபோது பொழுது புலருங் கால மாயிற்று. செங்கதிரோன் தன் வான் வீட்டிலிருந்து எட்டிப் பார்த்தான். கங்கா நதிக்கரைமேல் "பேடீ" என்றொரு சிறு கிராம மிருந்தது. அங்கே சந்திரகாந்த சிரோமணி யென்னும் பெயரையுடைய பல கல்வித்துறைகளிலும் பயின்று தேர்ச்சி யடைந்த பண்டிதர் வசித்து வந்தனர். அவரது கல்விச்சாலை அக்காலத்தில் வங்காள

மெங்கும் புகழ் பெற்றிருந்தது. ஆங்கிருந்த ஜமீன்தாரர்களெல்லோ
ரும் அப்பண்டிதரிடங் கல்வி கற்றுத் தேர்ந்த மாணவர்களே யாவர்.
உண்மையில் வங்காளத்தில் அப்பண்டிதரைப்போலக் கல்வி கற்றவ
ரும், கடவுள் பக்தியுள்ளவரும், ஜீவகாருண்ணிய முள்ளவரும், நல்லொ
ழுக்கமுள்ளவரும், புண்ணியசீலரும் கிடையாது. அவருக்கு வயது
எழுபது. அவரது குடும்பத்தில், அவரும் அவரது வயது சென்ற
மனைவியுமே இருவர் இருந்தனர். அவரோடு சில மாணுக்கர்களே எப்
போதும் வசித்து வந்தனர். அவர்களை அவர் தம் மக்களைப்போலவே
அன்பு பாராட்டி ஆதரித்து வந்தனர். அவருடைய அநேக மாணுக்க
ருள் இருபது வயதுடைய ஒரு வாலிப னிருந்தான். அவன், தன் குரு
கற்பிக்குங் கல்வியைக் கற்றுக்கொள்வதில் மிகவும் மந்தனுயிருந்தான்.
சிரோமணி பண்டிதரது வித்தியாசாலையில், கல்வி பயின்ற அநேகர்
நல்ல பாண்டித்தியமுள்ளவராயினர் ; ஆனுல், அந்தப்பிராம்மண வாலி
பன் விஷயம் முற்றும் வேருகவே யிருந்தது. எவ்வாருயினும் அவன்
ஒரு பட்டம் (Title) பெறுதற்கு ஆவலுடையவனுயும் விடா முயற்சி
யுடையவனுயு மிருந்தான். அவனது மனவுறுதியும் பிடிவாதமுமே
பண்டிதர் மனத்தைத்தூண்டியதால், அவர் அவனுக்கு 'வித்தியார்
னவ' என்ற பட்டம் வழங்கினுர்.

அது முதலாக ஒவ்வொருவரும் அவ்வாலிபனை 'வித்தியார்னவா,
என்றழைத்தனர். அவன், தன் ஆசிரியர்பால் பக்தியுள்ளவனுய்,
அவரை விருந்துக்கு விரும்பி யழைக்கும் இடங்களுக்கு அவர் போகும்
போதெல்லாம் அவர் பின்னேடு போவது வழக்கம். அவனுக்கு ஆசி
ரிய பக்தியே அவ்வளவு நோக்கமல்ல. அவன் கல்வியில் மந்தமதியி
னு யிருக்குங் குறைவை வாய்க்கிதமான உணவைச் செவ்வையாக
உண்பதில் நிறைவாக்கினுன்

அதி காலையில் வித்தியார்னவன் பூணூலைக் காதில் சுற்றிக்கொ
ண்டு காலைக்கடன் கழித்தற்குப் போய் உட்கார்ந்த போது, சில திரு
டர்கள் சுமந்து வரும் சிவிகை ஒன்றைக் கண்டான். அவன் உடனே
பயந்து தன்னை மறந்தவனுய்ப் பேய் பிடித்த பயித்தியக்காரனைப்
போல வுளறி அழுதுகொண்டே பண்டிதர் வீட்டண்டை ஓடி வந்து
வீழ்ந்தான். அவனவ்வாறு ஓடி வந்ததால் அங்கே பெருங் குழப்ப
முண்டாயிற்று. உள்ளே இருந்த மாணுக்கரெல்லோரும் தடிகளைத்
தூக்கிக்கொண்டு வெளியே வந்தார்கள். அச்சமயத்தில் கள்வர்கள்
சிவிகையைக்கொண்டு வந்திறக்கினர். உடனே சிரோமணி பண்டிதர்
உள்ளிருந்து வெளி வந்தனர். அவர்களெல்லோரும் அவரை வணங்கி
அவரது ஆசீர்வாதம் பெற வேண்டினர். அவர், "சிரஞ்சீவிகளாக
வாழக் கடவீர்கள்" என்று வாழ்த்தினர். வித்தியாசாலை மாணுக்கர்கள்
முற்றத்தின் ஒரு மூலையிலிருந்து வித்தியார்னவனைப் பரிகசித்துக்
கொண்டிருந்தார்கள். அவர்களில் அருவன் அவனைத்தூக்கி நிற்க வைத்
தான் அப்போதும் அவன் 'திருடர்கள் ! திருடர்கள் !" என்று
சொல்லிஅழுது கொண்டே யிருந்தான் எவ்வாருயினும் அச்சிறு தலை

யன், தன்னுடைய நண்பின ரெல்லோரும் நகுதற்கு உடம்பெடுத்தா ுயினும், அவன் தானிழந்த பெருமையை உறுதிப்படுத்தற்கு மேலுமே லும் முயற்சி செய்தான். அவன், பழிப்புக்கிடமான தன்னறிவீனத் தாலே, மீண்டும் " ஓ மூடர்களே ! உங்களுக் கென்ன தெரியும் ? என் பயத்தாலன்றோ அவர்கள் ஓடிப்போனார்கள் " என்றான். அதனைக் கேட்டதும் இன்னும் பெரு நகைப்பும் பேரிரைச்சலு முண்டாயிற்று. பண்டிதரும் அவ்விரைச்சலைக் கேட்டனர். அவர் அவ்விரைச்ச லுக்குக் காரணந் தெரிந்தவராய், எல்லா மாணவரையும் அவ்விடத்தை விட்டுப்போகுமாறு கட்டளை யிட்டனர். உடனே எல்லோரும் வெளி யே போயினர். ஆனால், அவர்களுக்கு, சிவிகையினுள்ளிருப்பவர் யாவ ரென்பதை அறிந்து கொள்ளற்கு ஆசை அதிகரித்தது. அபூர்வ வஸ் துவை, அதாவது முன் பாராத பொருளைப்பார்க்க வேண்டுமென்னும் ஆசை மிகுதியால் மனத்திற்குக் கஷ்டமுண்டாகிறது மனித இயற்கை யாம். கல்வி பயிலும் மாணவ னொருவன், கூடார்த்தமான தத்துவ ஞானத்திற்குரிய வேதாந்தத்தின் சந்தேகப் பொருள்கள் கடினமாயி னும் எளிதில் அறிந்துகொள்வான். ஆயின், முன் பாராத பொருளைப் பார்க்க வேண்டுமென்று எழும் மன வெழுச்சியை அடக்குவது பெருங் கஷ்டமாகும். அன்றியும், பெண்பால் ஒருத்தியை வித்தியாசாலையில் காண்பது உண்மையில் நவீன காட்சியாயிருந்தது ; ஆகலின், மாணாக்க ரெல்லோரும், புதிதாக வந்திருப்பவர் யாவரெனத் தெரிந்துகொள்ள ஒளிந்திருந்தனர்.

V

சிரோமணி பண்டிதர் ஆவலுடன் சிவிகையை நோக்கியவண்ண மே யிருந்தார். அநந்தராய் அதனை யறிந்து ! " குருமூர்த்தி ! அவள் சுப்ரியராயின் மகள் பானுபாய் " என்றான்.

அதனைக்கேட்டுப் பண்டிதர் நடுங்கிய குரலுடன் "அவள் இவ் வாறு வருதற்குக் காரண மென்ன ? " என்றார்.

" ஐயோ ! நாங்க ளெல்லாவற்றையும் இழந்தோம் " என்றான் அநந்தன்.

" என்ன என்ன!" என்று வியப்புற்றுக் கேட்டார்.

பின்னர் அநந்தன் எல்லாச் சம்பவங்களையும் மிகு நுட்பமாக அவருக்குச் சொல்லினான். சிரோமணியார் கண்களில் நீர் ததும்பி யது. அவரது உத்தமமனைவியார் வாய்விட் டழுதனர். இக்கதை களெல்லாம் ஆவலுடன் கேட்டிருந்த மாணவர்கள் கோபாவேசங் கொண்டார்கள்.

மீண்டும் அநந்தராய் " குருதேவ் ! உங்களுக்கு எல்லாந்தெரியும். நான், எல்லாப்படியாலும் விவாகஞ்செய்து கொண்டேன் ; ஆனால், விவாகத்திற் கூறவேண்டிய மந்திர மாத்திரம் நான் ஓதவில்லை. படா

னியரைத் துரத்தி விடுவதாக வாக்குத் தத்தஞ் செய்திருக்கிறேன். அதனால், என்னுயிரை யிழக்க நேரினும் அதுஎனக்குப் பெரிதல்ல. பானுபாய் திக்கற்றவ ளானாள். இவளைக் காப்பாற்றுவா ரெவரு மில்லை. சில சமயம், பொல்லாதவர்களாகிய படானியர் இவளைக் கவர்ந்து செல்ல முயலுவார்கள். ஆகலின், இவளை உங்கள் வீட்டில் உங்கள் நிழலில் வைப்பது தகுதியெனக் கருதுகின்றேன்" என்றான்.

சிரோமணியார் விதிர்த்த குரலுடன்,"என்னிடத்திலா! என்னிடத்திலா! இவளைப் பாதுகாக்க என்னு லியலுமா?" என்றார்.

அது கேட்ட அநந்தராய் பிடிவாதமாக "ஐயா! தாங்கள் இவ் வங்காளத்திலுள்ள ஜமீன்தார்களில் பெரும்பான்மையோர்க்கு ஞான சாரியராக விளங்குகிறீர்கள். உங்களை அவர்களெல்லோருந் தெய்வமாகப் பாவித்துப் பக்தியுடன் வழிபாடு செய்கின்றார்கள்; ஆகலின், படானியர் உங்களுக்குத் துன்ப மிழைக்கத் துணியார்கள். அங்ஙனந் துணிவார்களாயின், வங்காள முற்றும் கொழுந்துவிட் டெரிவது திண்ணம். அதனால், படானியர் அவ்வெரிக்கு இரையாவார்கள்" என்றான்.

"குழந்தாய்! இப்படானியர்க்கு முன், நம் இந்தியா தேசத்தைப் பல மகமதிய அரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் நம் இந்துக்களை அன்போடு ஆதரித்து வந்தனர். நம்மவர்களுக்குத் தங்கள் அரசாங்கத்தில் உயர்தர உத்தியோகங்களைக் கொடுத்தனர். தேச ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்க ளேற்படுத்தினர். நம் இந்துக்களோடு வித்தியாசமின்றி உறவாடி வந்தனர். பாவத்திற்கு அஞ்சினர். புண்ணியத்திற்கு மார்பைத் தட்டினர். அவ்வாறிருக்க இப்படானியர்க்கு மாத்திரம் இத்தகைய தீயகுணங்க ளேற்படுவானேன்? இவர்களுக்குக் கடவுள் நம்பிக்கையில்லை போலும்" என்றார்.

அவர்கள் சம்பாஷணை இவ்வளவில் நின்றதும், சிரோமணியாரது மனைவியார் விரைந்து சிவிகை யருகிற் போய்த் திரையை நீக்கி "என் தாயே! வருக" என்றழைத்தனர்.

பானுபாய் தாழ்ந்த குரலால் "அம்மா! அம்மா!?" என்றழுதாள்.

சிரோமணியார் மனைவியார், அச்சிறுமியைச் சிவிகையை விட்டிறக்கிப் பண்டிதரிடங் கொண்டு வந்து விட்டனர். அவள் பக்தியுடன் அவரது அடித்துகள் தன் முடியிற் பொருந்த வணங்கினாள். சிரோமணிப் பெரியோர் அவளது சிரமேல் தனது கரங்களை வைத்துக்" குழந்தாய்! நீ நீடூழி வாழக்கடவாய், நீ நீடூழி வாழக்கடவாய்" என்று வாழ்த்தினர்.

பின்னர் பண்டிதர் மனைவியார், பானுபாயை உள்ளறைக்கு அழைத்துப் போயினர். பிராம்மண பண்டிதர் ஒருவாறு மனந்தேறி, அநந்தராயைப் பார்த்துக் "குழந்தாய்! உட்காரு, உட்காரு. நான் உன்னிடமிருந்து எல்லாவற்றையும் அறிய விரும்புகின்றேன். இன்

னும் எவ்வளவு காலம் நாம் இத்தகைய துன்பங்களைப் பொறுத்தல் வேண்டும்.” என்றார்.

அதனைக் கேட்டதும், அநந்தராய் செருக்குக்கொண்டு உள்ளம் பொங்கி “ஐயனே! இவற்றிற்கெல்லாம் யாரைக் குறை கூறுதல் வேண்டும்? உங்கள் பிராம்மணர்களையே யாம். இதற்கு முன்னே, இத் துர்ப்பாக்கிய முள்ள தேசத்தினின்றும் பிராம்மண சக்தியில்லாமற் போகவில்லை. குருநாதா! நான் இவ்வாறு சொல்லுவதற்கு நீங்களே நேரான சான்றுனீர்கள். வங்காளத்திலுள்ள செல்வவான்களும் ஏழைகளும் தங்கள் பாததூளியால் ஆசீர்வதிக்கப்பெற்றனரெனக் கருதுகிறார்கள். மகத்தான இந்து மதத்திற்கு உங்கள் பிராம்மணர்களே வைரம் பொருந்திய தம்பங்க ளாகிறார்கள். எல்லாக் கல்வியும் ஞானமும் உங்கள் பிராம்மணர்கள் வசமே யிருக்கின்றன. சுவாமி! பிராம்மணர்களாகிய நீங்களெல்லோரும் ஆணை யிடுவீர்களாயின், வங்காளத்திலுள்ள விருத்தர் வாலிபர்களாகிய ஆடவர் மகளிரெல்லோருந் தங்கள் தாய் நாட்டிற்காகத் தங்களுயிரைப் பலி யிடுவதற்குச் சித்தமாயிருப்பார்கள். ஒரு கோடி வங்காளியர் தங்கள் தூக்கத்தினின்றும் விழித்துக் கொள்வார்களாயின், அற்பத் தொகையினரான படானியர் கூட்டத்தை இந்திய சமுத்திரத்தில் தாழ்த்தி விடுவார்கள். குருநாதரே! வங்காளத்தின் இப்போதுள்ள பரிதாப நிலைமைக்கு யாரைக் குறை கூறுதல் வேண்டுமென்று நீங்கள் எனக்குச் சொல்லுங்கள்” என்றான்.

அதனைக்கேட்டதும், விருத்த பண்டிதரின் கண்களில் நீர் ததும்பியது. அவர் தழுதழுத்த குரலில் “குழந்தாய்! இது விதிப்பயன், விதிப்பயன்” என்றார்.

அவ்வாறு சொல்லியதைக்கேட்ட அனந்தராய், அஞ்சாத சிங்கத்தை யொத்த தைரியமும், நியாயமான கோபமுங் கொண்டு “பண்டிதோத்தமரே! தேவரீர் பழங்கதையையே பகர்கின்றீர்கள். இஃது, எல்லாப் பிராம்மணர்களுங் கூறும் பழங்கதையே யாகும். பிராம்மணர்களெல்லோரும் தங்கள் சரீரத்தில் ஆண்மையில்லாததுபோல விதிப்பயன், விதிப்பயன் என்று கூறி ஆயிரம் பிரபந்தங்களைப் பாடமாக ஒப்பிக்கின்றார்கள். இவ்வாறு நான் சொல்வதற்குத் தேவரீர் என் மீது கோபங் கொள்ளவேண்டாம். என் தலை சுற்றுகின்றது. உங்களிடத்தில் உண்மை பேசுகின்றேன் கேளுங்கள். வங்காளத்திலுள்ள பிராமணர்க ளெல்லோரும் பேய்களாயினர். வங்காளத்தில் பிராம்மண தரும மில்லாமற் போனதால், உண்மையான பிராம்மணன் மறைந்து போனான். அவனுக்கிருந்த ஆத்மஞான சக்தியும் வீரமும் மீண்டுந்திரும்பி வராதபடி மறைந்து போய், அவன் ஆவி மாத்திரம் இங்கிருக்கின்றது. நாமும் அதே வழக்கைப் பின் பற்றினோம். இஃதென்ன பரிதாபம். இல்லாவிடின், நாமேன் நாயினுங் கடைப்பட்ட இத்தகைய துன்ப நிலைமைக்கு வரவேண்டும்? ஒவ்வொரு பிராம்

மணனிடமிருந்தும் விதிப்பயன்! விதிப்பயன்! விதிப்பயன்! என் பதே அழுகையாய் விட்டது. அவர்கள் தானுக உண்டான பல் வகைத் துன்பங்களை எதிர்க்க முடியாமல் அவற்றிற்குக் கீழ்ப்படிந்து, அப் போதைய அநுபவத்திற்கு மாத்திரம் மனேபாவனையால் திருப்தி யடைந்து "விதிப்பயன்" என்று சொல்லுகிருர்கள். ஆனல், எனது புயத்தில் பல மிருக்கிறதா வென்று பார்க்கின்றேன். எனது இருத யத்தில் சக்தி, வீரம், மானம், பெற்ருேர்பால் பக்தி, தாய்நாட்டின் மேலன்பு, நியாயமாகப்பழிக்குப் பழிவாங்கும் உணர்ச்சி, மனேசக்தி இவை யாவு மிருக்கின்றனவா வென்று பார்க்கின்றேன். இவை யாவு மிருக்குமாயின், 'விதி' என்பதைத்துண்டந் துண்டமாகப் பிளந்தெறி வேன். ஆயிரம் விதியாயினும் அவ்வாறே செய்து காற்றிற் பறக்க விடு வேன். அஃதேபோலப் படானியரைத் தேசத்தை விட்டுத் துரத்தித் தாய் நாட்டை அவர்கள் சிறையினின்றும் விடுவிப்பேன். இக்காரியத் தில் நான் தவறுவேனுயின், எனது தேசமாகிய பலிபீடத்தில் என்னு யிரைப்பலியிடுவேன்" என்ருன். அநந்தராயின் ஆத்திரம் அடங்க வில்லை. தாய் நாட்டின் துக்க நிலைமையை நினைக்குந்தோறும் அவன் மனந் தீயிற்பட்ட மெழுகென வுருகியது. அவன் கண்களினின்றும் உஷ்ணமான நீரைத் தாரைதாரையாக வடித்தான். அவன், தன்னிரு கரங்களாலுங்கண்களை மூடிக்கொண்டு சிறு பிள்ளையைப்போல அழத் தொடங்கினன். தன்னுலான மட்டுந் தன் துக்கத்தை அடக்கிப் பார்த்தான். அது தன்னல் முடியவில்லை. அவன் தன் தாய் தந்தை யர் மரணத்தின் பின் கண்ணீர் விட்டது இதுதான் முதற்றடவை யாம். அவ்வா ருக அநந்தன் அழுதுகொண்டிருக்கையில், காலு சர்தார் எழுந்து நின்று "நமது சின்ன எஜமானர் சொன்னது உண் மையேயாம். அதைத்தான் நாமெல்லோரும் செய்யவேண்டும். உங்க ளுக்கு வேறு ஒன்றுந்தெரியாது, வாழைப்பழமும் சோறுந்தான் தின்னத்தெரியும்' என்ருன்.

அவ்வாறு காலு சர்தார் கூறியதைக்கேட்ட வித்தியார்னவன் மிக்க சீற்றங்கொண்டு "அடே. நீ அக்ஷர உணர்ச்சியில்லாதமூடனுன தால், ஞானுசாரியர் சமுகத்தில் எவ்வித மரியாதையோடு பேசவேண் டுமென்பதை உணராதவனுய், அவரையே அங்ஙனங் கர்வமாகப்பேசி னுய். நீ வாயை மூடிக்கொண்டு சும்மாயிரு. நீ உன் வேலையைப் பார். நீ பெரிய விஷயங்களில் உன் தலையை நுழைத்துக்கொள் ளாதே" என்ருன்.

VI

ஞானுசாரியராகிய சிரோமணி பண்டிதருக்கும் அவரது இடரு மூக்கும் சீடன் அநந்தனுக்கும் மனேவேதனைக்கிடமான சம்பாஷணை முடிந்ததும், பண்டிதர் அநந்தனை நீராடப்போகும்படி வேண்டினர். அவன், தன் குருவின் வேண்டுகோளை மறுத்தற் கில்லாம லிணங்கி னுன். துயரம் பொறுக்கமுடியாத தன் தாய்தந்தையரின் மரணத்

தின் பின், அவன் தலையில் தண்ணீர்விட்டது இதுதான் முதற் றடவையாகும்.

அவன், தன் தந்தையின் சவத்தைக் காஷ்டத்தின்மீது வைத்தபோது, அவன் தாய், தானே பலியாகும் புண்ணியச் சடங்கை அகமகிழ்ச்சியோடு நிறைவேற்றினர். (உடன் கட்டை யேறினர்). அவன், தன் தந்தையின் சவத்தையும், தன்னருங் கணவனுடன் அநுதாப ஐக்கிய நிலையடைந்த, தன் அன்புள்ள தாயின் ஆருயி ருடம்பையும் ஈமத்திருக்கும் ஈமவிறகில், தானே தன் கைகளாற் கொள்ளி வைத்தான். தாயி னுடம்பு வெந்து நீருயிற்று, அப்போது அநந்தன் உறவினர், அவனை ஸ்நானஞ் செய்யும்படி வற்புறுத்தினர். உடனே அவன் பிறர்க்குத் தெரியாமல் மறைந்து போயினன். அவன் எங்கு சென்றதும் ஒருவரு மறியார். அவன் மெள்ள மயானத்தை விட்டு நீங்கும்போது பார்த்தவர்களேனும் அவனருகிற் செல்லத் துணியவில்லை. அந்தக் கோரமான நாள் முதல் ஒரு கவள உணவேனுந் தொட்டானில்லை. ஆனால், அவனுடைய ஞானகுருவின் மனைவியாரது வேண்டுகோளை அவன் மறுக்கக்கூடவில்லை. உத்தம குணமுள்ள பார்ப்பனப்பெருமாட்டி அவனை உட்காரச் செய்து கவளங் கவளமாக வாயிற் புகட்டினள். அநந்தன் ஓயாது கண்ணீர் வடித்தவண்ணமேயிருந்தான்.

அவ்வாருக, அநந்தன் வருத்தத்தோடு கவளங் கவளமாக விழுங்கிக்கொண்டிருக்கும் போது, தனக்குப் பின் புறமிருந்து "அநந்தராய்" என்ருெரு இனிய குரலோசை யுண்டாயிற்று. அவ்வோசை பண்டிதர் வீடெங்கும் பரவியது. அதனைக்கேட்ட அநந்தன் ஆகாயத்தை நோக்கினன். பண்டிதர் மனைவியரும் அஞ்சினர். சிரோமணியாரும் வியப்புற்று விழித்தனர். அவர்கள், வாயிற்கதவுக்குப் பின்னே சித்திரப் பொற்பாவை போல அசைவற்று நிற்கும் பானுபாயைப் பார்த்தார்கள். அவளது தடங்கண்கள் இமை கொட்டவில்லை. ஆயினும், அப்பொன்னனை யாள் மேனியினின்றும் திவ்ய வொளி பிரகாசித்தது. நொடிப் பொழுதில், அவளது கொவ் வையங்கனி போன்ற உதடுகளிலிருந்தும் புன் முறுவல் பூத்தது. அவள் அப்புன்னகையோடு "அநந்தராய்! நீர் உணவருந்தாமல் இவ்வாறு கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தால், உமது தாய்நாட்டை மீட்கும் ஆற்றல் உமக் கிராது" என்ருள்.

அவளது இனிய குரலோசையும், மெல்லிய உடம்பினசைவும், பால்போலுஞ்சுவையுள்ள வாய்ச்சொல்லும் அங்கிருந்தோ ரெல்லோரையும் அதிசயத்தில் மூழ்கப்பண்ணிப் பேசவும் நாவெழாமற் செய்துவிட்டன.

எல்லோரும் வியப்புற்ற கண்களோடு அவளையே உற்று நோக்கினர். இன்னும் அவளது அழகிய முகத்திற் புன்முறுவல் விளங்கியது. அவளைப் பார்த்தவர்க ளெல்லோர்க்கும் அவளொரு தெய்வப் பெண்ணுகக் காணலானுள்.

பானுபாய் சித்திரப்பதுமைபோல அசையாது நிற்பதைக்கண்ட சிரோமணியார் ,' இவளது மனத்தையெல்லாம் ஏதோ ஒரெண்ணங் கவர்ந்திருக்கின்றது. இதுவே உண்மையான சமாதி நிலையாம். இதுவே தெய்வீக நிலையாம். இவளுக்குத் தெய்வ அருள் இருக்கின்றது. இவள் சாதாரணப் பெண்ணல்லள் " என்றார்.

அநந்தன், பானுபாயின் சிவந்த வாயினின்றும் சிந்திய இனிய சொற்களை மிக்க கவனத்தோடு கேட்டு " பானு ! நீ உண்மையே கூறினாய். நான் ஒன்றுக்கு முதவாதவனானேன். நான் செய்யவேண்டிய உண்மையான வேலையை விட்டுத் தூர நின்று பெண்பிள்ளையைப் போல அழுதுகொண்டிருக்கின்றேன்." என்று கூறி, விரைந்து தன் உடையின் முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டு அமைதியாக ஆகார முண்ணத் தொடங்கினான். தனக்குப் பரிமாறிய வுணவையெல்லா முண்ட பின், பானுபாய் நின்றிருந்த இடத்தைப் பார்த்தான், அவளை அங்குக் காணவில்லை.

அவன் ஆகாரம் உண்டு வாயலம்பிக் கைகால் சுத்தஞ்செய்த பின் வெளிக்கட்டுக்கு வந்தான். சிரோமணியார்க்கு, காலு சர்தாருக்கும் அவனது கூட்டத்தாருக்கும் உண்டியுதவாமல் அனுப்புவதற்கு மனமில்லை. அவர்களெல்லோரும் வீட்டு முற்றத்தில் உட்கார்ந்தார்கள். அவர்களுக்கு வித்தியார்னவன் அன்னம் பரிமாறினான்.

எல்லோரும் உண்ட பின் சிரோமணியாருடைய சண்டேஸ்வரி மண்டபத்திற்குப் போயினர். பாடசாலை மாணுக்கரெல்லோரும் அநந்தன் என்ன செய்யப்போகிறானென்பதை யறிந்து கொள்வற்கு ஆவலுள்ளவர்களாயிருந்தனர். அவர்கள் தர்க்கசாஸ்திரம் வேதாந்த சாஸ்திரங்களுக்கு மாணுக்கராயிருந்தார்கள் ; ஆயினும், அவர்கள் தாய் நாட்டின்மேல் மிக்க பற்றுடையவரா யிருந்தனர். படானியர் மேல் பகை கொண்டார்கள். அவர்கள் தங்கள் பாடங்களைப் படிப்பதை விட்டு, அநந்தனுடைய நோக்கத்தையும் இனி நடக்கவேண்டிய உபாயங்களையு மறிய அவனைச் சூழ்ந்து உட்கார்ந்தனர். காலும் அவன் கூட்டத்தாரும் அவர்களோடு உட்கார்ந்தார்கள். அவர்கள் புகை குடிப்பதில் முயற்சி யுடையவராயிருந்தா ராயினும், தங்கள் சின்ன எஜமானர் யாது செய்வாரென்பதை அறிய ஆவலுள்ளவர்களா யிருந்தன ராதலால், அவர்கள் அநந்தனுடைய தீர்மானத்தைத் தெரிந்து கொள்ளாதவரையுஞ் சிரோமணியார் வீட்டை விடவில்லை.

உத்தமரும் புண்ணியசீலருமாகிய ஜமீன்தார் சுசந்தராயின் தலை வெட்டுண்டது. அவரது கற்புடை மனைவியரும் அவரைப்பின் தொடர்ந்து ஈமவிறகேறி ஆருயிரோடு வெந்து நீறாயினார். அநந்தபுரி மாந்தரெல்லோருங் கொல்லப்பட்டார்கள். அநந்தபுரியும் வெந்து சாம்பராயிற்று. அநந்தராயும் பானுபாயுந் தவிர, அவரவர்களுக்குப்பிரியமும் உரியவையுமான எல்லாப்பொருள்களுங் கண்ணுக்குப் புலப்படாமற்

போயின. அவர்களிருவரும், வங்காளத்திலுள்ள பண்டிதர்களுக்குள்ளே சிறந்தவரான சிரோமணி பண்டிதரைச் சரண் புகுந்தனர். ஆகலின், அவர்கள் அநந்தன் சிரோமணியார் இவர்களுடைய தீர்மானத்தைத் தெரிந்து போவதற்குக் காத்திருந்தனர்.

அப்போது சிரோமணியார் "குழந்தாய் அநந்தா! உனது முயற்சி வீண்படுமென நினைக்கின்றேன். ஏனெனின், அஃது அஜகஜாந்தரமா யிருக்கின்றது. மண்ணுங்கட்டிக்கும் மலைக்குமுள்ள வித்தியாசம் எங்ஙனமோ அங்ஙன மிருக்கின்றது. ஆயினும், உன் கருத்து உண்மையில் புகழத்தக்கதேயாம். அதற்கு நான் இடையூறு விளைவிக்க மாட்டேன். இவ்வித சந்தர்ப்பங்களில் உன்னைத்தடுப்பது தவறாகும். தந்தையைக்கொன்ற பாதகனைத் தண்டிப்பது மைந்தன் கடமையாகும். நான் உன்னை ஆசீர்வதிக்கின்றேன். நீ வெற்றி பெறுவாய் போய்வருக" என்றார்.

அதனைக்கேட்ட அநந்தன் "குருநாதரே! என் தந்தையைக் கொன்றவனைக் கொல்ல நான் விரும்பவில்லை. துன்மார்க்கர்களையும் கொலை பாதகர்களையுந் தண்டிக்கக் கடவுள் இருக்கின்றார். இத்தேசத்தில் அவ்வித பயங்கரமான சம்பவங்கள் மீண்டும் உண்டாகாதிருக்கவும், நமது தாயாகிய வங்காளத்தின் துன்பம் ஒழியவும், படானியர் தொலைந்து போகவும், தாய் நாட்டின் சிறையை மீட்கவும் நான் தக்க முயற்சி செய்து முடிக்க, அடியேனைத் தேவரீர் ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்" என்றான்.

அதனைக்கேட்ட சிரோமணியார் சிறிது நேரம் பேசாதிருந்து, பின்னர் "குழந்தாய்! நீ உன் விருப்பத்தை முடிக்கக் கடவாயென நான் உன்னை ஆசீர்வதிக்கின்றேன்" என்றார்.

அவ்வாறு அவர் கூறவும் "எதனால்" என்றான் அநந்தன்.

அதற்குச் சிரோமணியார் "நான் இப்போது உனக்குச் சொல்ல மாட்டேன். உன்னுடைய மனக்கொதிப்பில் குளிர் நீர்விட்டு ஆற்ற மாட்டேன். நான் உன்னை ஆசீர்வதிக்கின்றேன். உண்மையில் உனது கருத்து முடிவு பெறும்" என்றார்.

எவரும் புகழுதற்குரிய பண்டிதர், மனப்பூர்வமாகச் செய்த ஆசீர்வாதத்தினால் அநந்தனது சோர்ந்த மனம், மகிழ்ச்சியால் உவப்புற்றது. அவன், தன் கோரிக்கை முடிவெய்துமென்று தைரியங் கொண்டு, "குருமூர்த்தி! என்பால் உங்களுடைய பூரண கிருபையில்லாமல் என் விருப்பத்தை நான் எவ்வாறு முடித்துக்கொள்ளக்கூடும்?" என்றான்.

"குழந்தாய்! என்னை யென்ன செய்யச்சொல்லுகின்றாய்"? என்றார் சிரோமணியார். அதற்கு அநந்தன் "ஐய! வங்காளத்தில் தலை

சிறந்த ஜமீன்தாரர்களெல்லோரும் தேவரீர் மாணுக்கரே யாவர். அவர்களெல்லோரையும் எனது நன்முயற்சியில் துணை புரியுமாறு கேட்டுக்கொள்வீர்களென்று தேவரீரிடத்தில் விண்ணப்பிக்கின்றேன். அவர்களில் எவரும் உங்கள் ஆணையை மறுக்கத் துணியார்கள். நான் ஏழையுந் திக்கற்றவனு மாயினேன். படானியர்களோ பலசாலிகள். அவர்களை நானொருவன் எவ்வாறு ஜெயித்தல்கூடும்?" என்று வினவினன் அநந்தன்.

அதனைக்கேட்ட பண்டிதர் "குழந்தாய்! நான் உனக்குச் சிலவற்றைச்சொல்ல விரும்புகிறேன். அதனைக்கேட்க உனக்கு விருப்பமுண்டா?" என்றார்.

"என்ன! உங்கள் சொல்லைக் கேளாமல் வேறு யார் சொல்லைத்தான் கேட்க விருக்கின்றேன்" எனவும் "மகனே! நீ தாய்நாட்டைப்பற்றிப் பேசுகின்றாய். தாய் நாடென்பது மலைகள், மரங்கள், செடிகள், கொடிகள், ஆறுகள். ஏரிகள், குளங்கள் முதலியவை மாத்திரம் அடங்கியதன்று. அதில் ஆண்மக்களும் பெண்மக்களும் அடங்கியிருக்கின்றனர். நமது தாய் நாடு இப்போது தான் புதிய பிறவி எடுத்திருக்கின்றது. அவள் இன்னுங் குழந்தைப்பருவத்தி லிருக்கின்றாள். குழந்தைப்பருவத்திலிருக்கும் அவளைக் காத்தற்கு ஒரு காவலன் வேண்டும்" என்றார் பண்டிதர்.

"குரு சுவாமி! என் பிழை பொறுத்தருளல் வேண்டும். தாங்கள் கூறுவதின் பொருளைத்தெரிந்து கொள்ள அசக்தனாயிருக்கின்றேன்" என்றான் அநந்தன்.

எந்தத் தேச ஜனங்களும், குழந்தாய்! குழந்தைப்பருவத்தில் சுவாதீனமாக வேலை செய்ய முடியாது. அவர்கள் அவ்வாறு செய்ய முயலுவார்களாயின், ஒரு சிறு குழந்தை தன் கையை நெருப்பிலிட்டுத்துன்புறுதல் போல, அபாயத்தையே எதிர்கொள்வார்கள். வங்காளத்திலுள்ள ஜமீன்தாரர்களை நான் வேண்டினும் அவர்கள் ஒருபோதும் ஒன்று சேரார்கள். அவர்கள் பல கல்வித் துறைகளிலும், தங்கள் கடமைகளிலும், பல தேச ஜனங்களின் வழக்கப்பழக்கங்களிலும், பல தேச சரித்திரங்களிலும், இராஜநீதி தருமங்களிலும், இராஜதந்திரங்களிலும் நல்ல பயிற்சி யடைந்து விருத்திக்கு வந்தாலொழிய, எல்லோரும் ஏகோபித்து ஒரு காலும் ஒரு தேசவாசிகளாக ஏற்பட மாட்டார்கள். அன்றியும், பயனற்ற சடங்குகளும், அறிவீனத்தால் சிறிதுங் கருணையின்றிச் ஜீவவதை செய்தலும், ஒருவருக்கொருவர் போட்டி செய்து தங்கள் பொருளை வீண் செலவு செய்தலும், ஆபாசத்தெய்வக் கொள்கைகள் நாட்டில் பரவிப்பழிக்கும் பாவத்திற்கும் இடமுண்டாதலும் நமது தேசத்தை விட்டு முற்றும் ஒழிந்துபோதல் வேண்டும். அறிவையும் உடம்பையுங் கெடுக்கும் மதுபானம், அபின் முதலிய சரக்குகள் அடியோடு மாளல்வேண்டும். அவ்வா

தின்றி இப்போதிருக்கும் நிலைமையே யெப்போது மிருக்குமாயின் தேசசனங்கள் ஒருபோதும் சுவாதீனர்களாகிச் சுகத்தோடு வாழ்தல் முடியாது என்று கூறினர் சிரோமணியார்.

அகந்தன் :—ஐய ; ஆயின், இப்பிரபஞ்ச அழிவு நாள் வரையும் நமது அதிட்டவீனமான தேசம் இப்படியே யிருக்குமென்பது உங்கள் கருத்தா ?

சிரோமணியார் :—அப்படி யல்ல, தேசமானது முன்னேறும் வழியில் படிப்படியாக உயரும். அஃது அவ்வாறு ஒழுங்கான முற்போக்கை யடையும் போது, அதற்குச் சுவாதீனமாக வேலை செய்யச் சக்தி யுண்டாகும். பெருஞ் ஜனத் தொகையுள்ள ஒவ்வொரு தேசத்திற்கும், மூப்பு, மரணம், மறுபிறவி, குழந்தைப்பருவம், வாலிபப் பருவம் உண்டு. இவ்வாறுவது பிரபஞ்ச நியமம். அதனை ஒருபோதும் வெல்வது கூடாது.

அகந்தன்:—ஐய! நாம் சோம்பி, வாய் மூடிக் கை கட்டி உட்கார்ந்திருத்தல் வேண்டும். படானியர், தேசத்தைப் பாழாக்கி, அது உதிரக்குட்டையில் அசைவற்றுக் கிடத்தல் வேண்டுமென்பது உங்கள் கருத்தா ?

சிரோமணியார்: —என் கருத்து அஃ தன்று. உலக இயற்கையை உனக்குச் சொன்னேன். உன்னை நான் அதைரியப்படுத்தேன். நீ போய் எனது பெயரைச்சொல்லி எனது மாணுக்கர்களைக்கண்டு அவர்களெல்லோரையும் உனக்குத் துணை புரியம்படி கேட்டுக்கொள். நீ வெற்றி பெறுவாயென உன்னை ஆசீர்வதிக்கின்றேன்.

“ அங்ஙனமே ஆகக் கடவது” எனக் கூறி அவன் மனங் கசந்து, தன் துக்கத்தை யடக்கிக்கொண்டு, குருவின் திருவடியில் வணங்கி விடை பெற்றுக்கொண்டான்.

உடனே வித்தியார்னவன் “ ஐய ! இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குள் வங்காளம் வாலிபப் பருவ மடையும்” என்று கேட்டான்.

அவ்வாறு அவன் கேட்க அதனைக் கேட்ட மாணுக்கர், தங்களை அடக்க முடியாமற் சிரித்தார்கள். உடனே பண்டிதர் மிக்க கவலையோடு “ இன்னும், குறைந்தது ஆயிர மாண்டுகளுக்குள்” என்ருர்.

தொடரும்.

இதற்குமுன் Vol. III No. 4-ல் 1 பாகமும் Vol. III No. 5-ல் 2, 3 பாகமும் வெளியாகிவிட்டன.

மைரா என்னும் பிரமாண்ட நட்சத்திரம்.

மைரா என்னும் நட்சத்திரம் 25 கோடிமைல் குறுக்களவு உள்ளதென்று இப்போது கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. இதுவரை கண்டு பிடிக்கப் பட்டிருப்பன வற்றுள் அண்டாரிஸ் நட்சத்திரம் ஒன்றுதான் இதை விடப் பெரியதாம். அண்டாரிஸின் குறுக்களவு 40 கோடி மைல். இது வரை அண்டாரிஸுக்கு அடுத்த படியில் வந்தது பெடல்கஸ் என்னும் நட்சத்திரம். இதன் குறுக்களவு 21 கோடி 50 லட்சம் மைலாம். நமது பூமியின் குறுக்களவு 8000 மைல்தான் என்பதை நினைத்துப் பார்த்தால் மேற் சொன்ன நட்சத்திரங்கள் எவ்வளவு பிரமாண்டமானவை என்பது தெரியவரும்.

நட்சத்திரங்களின் குறுக்களவை அளக்கும் இண்டர் பராமீடர் (Inter-ferometer) என்னும் கருவி ஆசிரியர் ஏ. ஏ. மைகால்ஸன் என்பவரால் கண்டு பிடிக்கப் பட்டது. 1920-ம் வருஷத்தில் இது முதன் முதலில் உபயோகிக்கப் பட்டது. இப்போது கலிபோர்னியாவில் மௌண்ட் வில்ஸன் நட்சத்திர மண்டபத்தில் உள்ள 100 அங்குல அகல தூரதரிசினியில் இக்கருவியைப் பொருத்தி ஆசிரியர் எப். ஜி. பீஸ் என்பவர் பல நட்சத்திரங்களின் குறுக்களவைக் கண்டு பிடித்திருக்கிறார். ஆர்க்டரஸ், அயல்டிபாரன், அல்பா, ஹெர்கியுலீஸ் முதலியவை இவற்றுள் சில.

மைரா என்னும் பதத்திற்கு அதிசயமானது என்று பொருள் இந்த நட்சத்திரத்தில் ஏற்படும் வேடிக்கையான மாறுதல் களால் இதற்கு இப்பெயர் வந்தது. பதினோரு மாதத்துக் கொருமுறை சுமார் ஒரு மாதத்துக்கு இது மிகப் பிரகாசமாய்ச் சாதாரண கண்களுக்குப் புலப்படுகிறதாம். பின்னர் வரவர மங்கித் தூரதரிசியின் துணையில்லாமல் பார்க்க முடியாத தாகி விடுகிறதாம். இதற்குச் சமீபத்தில் சற்று நீல நிறமுள்ள இன்னொரு மங்கலான நட்சத்திரம் இதன் தோழனாய் இருந்து வருவதாக இப்போது கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. 'சமீபத்தில்' என்றால் நட்சத்திர உலகில் சமீபமானதென்று கொள்ள வேண்டும். இவை இரண்டுக்கு மிடையே 400 கோடி மைல் தூரம் இருக்கிறது! இவை ஒன்றைச் சுற்றி ஒன்றாகச் சுழன்று கொண்டிருப்பதால் இவை இரண்டும் ஒரு வரிசையில் இருக்கும் போது இரண்டு தனித்தனி நட்சத்திரங்களைப் பார்க்க முடியாது. நமது சூரியனைச் சுற்றிக் கிரகங்கள் இருப்பதுபோல் நட்சத்திரங்கள் ஒவ்வொன்றைச் சுற்றியும் கிரகங்கள் உண்டு. இவ்விரண்டு நட்சத்திரங்களைச் சேர்ந்த ஏதானுமொரு உலகில் இருப்போருக்கு அவை கண் கொள்ளாக் காட்சியாக விளங்குமாகும். நமது பூமியிலிருந்து மைராவினுடைய தூரம் 165 ஒளி வருஷங்கள். அதாவது மைராவி லிருந்து புறப்படும் ஒளி பூமியை அடைய 165 வருஷங்கள் செல்லும்! ஒளி ஒரு வினாடிக்கு 186,000 மைல் வீதம் பிரயாணம் செய்கிற தென்பதை நினைவில் வைக்க வேண்டும்! இதனால், பூமியி லுள்ளவர்கள் எப்போது மைராவைப் பார்த்தாலும் 165 வருஷங் களுக்குமுன் அது எவ்விதத் தோற்றத்துடன் இருந்ததோ அப்படித்தான் புலனாகும்.

"நேச்சர் மகஸைன்."

மகரிஷி தயானந்தர்

ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008 20355

(ஆக்கியோன் . ஆசிரியர் டி. எல். வஸ்வானி எம். ஏ.)

தமிழ்ப் படுத்திப தா.

ஸ்ரீமான் த. ராமகிருஷ்ணன்; வேத மாணிக்கன்.

இருஷி தயானந்தர்! ஒரு வியக்கத்தக்க வடிவம்! அவருடலில் அரைக் கச்சை யொன்று தான் மிளிர்ந்தது! ஆனால் இராஜபுத்ர அரசன் அவரைக் கண்டு அச்சமுற்று நின்றனன். வைதிக குருக்கள் அவர் நெருங்குவதைக் கண்டால் அச்சத்தில் மூழ்குவர்! ஆரிய நாட்டின் சீரிய கொள்கை அவருள்ளத்தும் வேறு சிலரை யொப்ப வெளிக்கிளம்பின. ஹிந்துஸ்தானத்திற் கப்பாலும் அவரது இனிய முழக்கம் செவிடுபடுங் காலம் விரைவில் வருக!

இளம் பருவத்தே, எவற்றையு மாராய்ந் துணர வேண்டு மென்ற சுறு சுறுப்பான உள்ளமுடையவர். சிவராத்திரியில் தேவர்கள் யாவரையுங் கடந்த தேவ தேவனது உயர்ந்த எண்ணம் அவருள்ளத்தில் எழுந்தது. இவ் வெண்ணம் அவர் வாழ்க்கையை ஆட்கொண்டது. அவர் தாய் தந்தையரையும் இல்லத்தையுந் துறந்தார்: உண்மையை வாய்மையை—மெய்மையைத் துறக்க இயலவில்லை அவர் இளைஞர். உண்மையைத் தேடி யடைய ஒரு நாடோடியாக வெளிப் போந்தார். அவருக்குத் தந்தை யாவர்? அவருக்குத் தாய் யாவர்? அவ் உயர்ந்தாருக்கு உண்மைக் குழைப்ப தன்றோ பணி யாயிற்று. எவ்விடத்து, யாண்டு, தயானந்தர் அவர் வீட்டைத் தேடிக் காண்பர்? இந்தியத் தாயைப் புதுக்கி இறைபணி கொள்வார் இதயத்தன்றோ காண்பர்!

அவரது புறப் பார்வை குறுகிய தென்று கூறுவார். அவர் வாழ்க்கையைத் திரிவுபட உணர்ந்தவராவர். அவருடைய தோழமைக்கு ஒரு முகம்மதியரையும் சில கிறிஸ்தவர்களையும் உடன் கூட்டிக் கொள்ள வில்லையோ? அவர் இதயம் ஏழையர் பாலும், தாழ்ந்தோரிடத்தும், தாழ்த்தப் பட்டோரிடத்தும் அன்பு பூண்டு நின்றது. இருஷியின் சொற் பெருக் கொன்று இறைச்சிக்காரன் ஒருவனை உயர் ஜாதியானாக மாற்றிவிட்டது. 'இறைச்சி விற்பா னுள்ளத்து என துரை பயன் பட்டதே' என்று செல்வரின் இறுமாப்பை இழித்துரைப்பர். ஒரு நாவிதன் அவருக்கு நல்ல உண வளித்தான். அதனை இருஷி மகிழ்ந் தேற்றுண்டனர். ஒரு நடனமாது அவரை தியான வேளையில் சந்தித்துத் தன் பொன்னணிகளை ஈந்திடச் சென்றனள். "நான் இவற்றை விரும்பேன். நான் விழைவ தொன்றே. நீ மேலும் பாவத்திற் காளாகாது ஒழுகிடுவாய்." என்றனர். தயானந்தர் இதயத்தில் ஏழையரிடத்தும் தாழ்த்தப்பட்டா ரிடத்தும் இரக்கம் நிரம்பியிருந்தது. இத்தகைய இரக்க மின்றி—அன்பின்றி நீங்கள் ஒரு புதிய தேசத்தைப் (சாதியைப்) படைத்துவிட முடியாது. கழகங்களும், சொற் பெருக்குகளும் காகிதத் தீர்மானங்களும் இந்தியாவுக்கு உதவி புரிய மாட்டா. அன்பில்லா அறிவு பயன் தருவ தன்று. இளைஞர்காள்! இவர்கள் உங்களை வேண்டி நிற்கின்றார்கள்—உழவர்கள், நாட்

டுப்புறத்தார், ஏழைகள், தாழ்ந்தோர். ஆயிர மாயிர மாகப் பதினாயிரக் கணக்காக உங்களை நாடி நிற்கின்றனர். உங்கள் முதியோர், பிதிரர் வரலாறுகளையும், உபதேசங்களையும், வேதவுரைகளையும் அவர்களிடையே பாடிச் செல்லுங்கள். கண்கள் சிரத்தையாகிய ஒளியொடும், உள்ளம் அன்பு ததும்பும் பாடல்களோடும் அவர்களை அடையுங்கள். அவர்கள் பாற் சென்று அவர்க ளுள்ளத்தும் இதயத்தும் நாட்டுப் பற்றுடையார் கனவினும் மிக்கதோர் அழகிய இந்தியாவைப் படையுங்கள். ஓம்.

மகான்களின் திரு மொழிகள்

(1) ஒருவன் தன் ஜீவிய காலத்தில் பகைமையை நேயத்தாலும், பொய்யை மெய்யாலும், முரட்டுத் தனத்தை தானே வருந்துதலாலும், சுலபமாய் ஜெயிக்கக் கூடியதான படிப்பே படிப்பு. (மகாத்மா காந்தி.)

(2) புதிய சட்டசபைகளை முற்றிலும் பகிஷ்காரம் செய்வதுதான் உதவி மறுத்தலின் எல்லா வழிகளிலும், வல்லமை யுள்ளதும், அபாய மற்றதுமான வழி யென்பதில் என் மனதில் எள்ளளவும் சந்தேக மில்லை. (காந்தி.)

(3) மனிதர்களுக்கு இயற்கையாகவே சில உரிமைகள் உண்டு. அவைகள் பொன் முடி தரித்த பூ பாலர்களினால் கொடுக்கப்பட்டவை யல்ல. மன்னருக்கும் மன்னராயிருக்கும் பகவானிடத்தி லிருந்து அவை வந்தவை. ஆகையால் அவைகளை அழிக்கவோ, பறிக்கவோ, எவருக்கும் எக்காலத்தும் அதிகாரமில்லை. (விபின சந்திர பாலர்.)

(4) தேசாபிமான மென்பது தங்கு தடங்கலற்ற பக்தி. தேசத்திற்காகப் பாடுபடும் ஒருவனை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும். (மதன் மோகன மாளவியா.)

(4) சுதந்தரமற்ற வாழ்க்கையைக் கொண்டு மாடமாளிகையில் வசிப்பதைக் காட்டிலும் சுதந்தரத்துடன் அடவிகளில் வாழ்வது நலம். (ரவீந்திர நாத தாகூர்.

(6) ஊழியமே மோட்சத்திற்கு ஊதியம். எல்லா ஊழியங்களைக் காட்டிலும் தேச ஊழியம் மிக்க சிறந்தது. தேச ஊழியஞ் செய்ய வருபவன் மனிதரிற் சிறந்தவனாவான். தேச ஊழியமே வாழ்க்கைக்கு இன்பத்தையும், சமாதானத்தையும் கொடுப்பது. (கோகலே.)

(7) இராஜ தந்திரம் இல்லாத ஒரு நாடு சுயமதிப்பை யடைய முடியாது. இராஜ தந்திரம் இல்லாத மனிதன் உலக மறிந்தவனாக மாட்டான். (ஸி. விஜயராகவா சாரியார்.)

(8) சுதேசியம் என்பது சுத்த தேசாபிமானம். சுதேசியம் நாடெங்கும் வளர்ந்தால் சுதந்திரம் ஓங்கும். தனவிர்த்திக்கும், ஜன நாயக உணர்ச்சிக்கும், கல்விப் பெருக்கிற்கும், சுதேசியமே இன்றியமையாத ஒப்பற்ற மருந்து. (ஜி. சுப்பிரமணிய ஐயர்.)

பிரம்மச்சர்யத்தின் உயர்வு

ஆசிரியர் வஸ்வானி காங்க்ரி குருகுல மாணுக்கர் கட்கு வழங்கிய நல்லுரை.

ஸ்ரீமான். த ராமகிருஷ்ணன் அவர்கள் தமிழ்ப் படுத்தியது.

உங்கள் ஆண்டு நிறைவு விழாவில், உங்கள் நடுவண் தோன்றுதற்கியலாமையான் மனங் கவல்கின்றேன். இந் நெடு வழியினின்று சில மொழிகளை உங்களுக்கு நான் விடுத்தல் கூடும். அஃது பிரம்மச்சர்யத்தின் உயர்வினைக் குறித்து எனது உள்ளத்தில் பதிந்து கிடக்கும் ஆழ்ந்த பற்றே யாகும். எனது ஆவல் மாணுக்கர் விடுதிகளிலும் குருகுலங்களிலும் பதிந்து கிடக்கின்றது. அவைகளே ஜனசமுகத்தின் வளர்ப்புத் தாய்மார்களாக இலங்குகின்றன.

எழுபா னேழாண்டு கட்கு முன்னர் செர்விய நாட்டார் விடுதலைப் போர் துவங்குங்கால், ஹங்கேரி நாட் டரச தந்திரியும் சிறந்த தேசாபிமானியுமாகிய கொஸூத் (Kossuth) என்பாரைப் பேட்டி கண்டு பேசத் தங்கினர். அவரைக் கண்டு, தாங்கள் ஒரே சமூகமாக வாழ்ந்தனமென்று பகர்ந்தனர். அதற்கு, 'நீங்கள் ஒரே சமுகத்தினராக வாழ்ந்து உணர்ந்தன யாவை?' என்று கொஸூத் வினவினர். அதற்கு செர்வியர் தலைவர் இறுத்த விடையாவது:—"ஒரு சாதி தனக்குரிமையான மொழியையும் கலைகளையும் ஒழுக்க வழக்கங்களையும் உடைத்தாகி, அவற்றை காப்பாற்றிக் கொள்ளத் தக்கவாறு போதிய தன்னுணர்வு படைத்திருத்தல் வேண்டும்" என்பதாகும். சமுக உணர்ச்சியானது உண்மையில், சாதீயக் கலைகளை நிரம்பப் பயிலுவதால் உரன்பெற வேண்டுவதாகும். இத்தகைய குருகுலம், ஆரியாவர்த்தத்தின் பழங் கலைகளைப் பயிற்றுதலால், புதியதோர் இந்தியாவைப் படைத்தற்குரிய சக்திகளுள் ஒன்றென்று யான் கருதுகின்றேன். இன்று பலரால் மறந்து பட்டதோர் பழங் கலையைத் தாமேற்றுச் சமுகத்தின் பிணியகற்றி உதவி புரிகின்றே னென்ற வாய்மை கடைப் பிடித்து நிற்றலா லென்க. ஆரியக் கலைகளுக்காக—ஹிந்து சாதியக் கலைகளுக்காக—ஆன்ம தத்துவக் கலைகளுக்காக—நீவிர் விழைகின்ற தோர் நவ இந்தியாவை நாட்டிடற்காக அவற்றை விட்டுவிட முடியாது. 'சமுக வொற்றுமை' என்பது, நீவிர், உங்கள் பழங் கொள்கைகளினின்று வேறு பட்டு நிற்பதாமோ?

மிகப் பரந்த எண்ணிக்கையுடைய நாம் இவற்றை மறந்து நிற்றலால், இந்திய நாடு புழுதி படிந்து கிடக்கின்றது. ஆண்டு இழிவைக் காண்கின்ரும். இந்து சாதி வலிமை யிழந்து வருந்தி நிற்கின்றது. "யான் எனது தாய்க்கு எத்தகைய கொடையினை அளித்தல் கூடும்" என்ற வினவை ஒவ்வொரு மாணுக்கரும் இவ்விழாவின் சீரிய சந்தர்ப்பத்தில் தங்கள் உள்ளங்களில் எழுப்புதல் வேண்டு மென்று யான்

விழைகின்றேன். எக் கொடை? ஒரு சமூகத்திற்கு வலிமையை—சக்தியை யளிப்பதை விட உயர்ந்த கொடையு முண்டோ? ஆற்றல் யாண்டும் பரவியதன்றோ? உடல் வலியா, உள வலியா, உயிர் வலியா? இந்து சாதியின் மேனியே அழிவுற்று நிற்கின்றது. எனவே, ஒவ்வொரு மாணுக்கருக்கும் யான் பகர்வது யாதெனின் :—உரன்மிக்க உடலைப் படைத்திடுக! தாய் உரன்மிக்க புதல்வர்களை, உரன்மிக்க புதல்விகளை வேண்டி நிற்கின்முள். நமது பாரதத் தாய் ஒருகால் இராமனை யொத்த, பீஷ்மனை யொத்த, உதிட்டிரனை யொத்த சிறந்த புதல்வர்களைப் பெற்றெடுத்தாள். இன்று இந்தியத்தாய் அடிமை யுள்ளத்தாரையும் சவலைப் பிள்ளைகளையும் வளர்த்து வருகின்முள். ஒரு சமூகத்தைச் சோதித்தறிதல் பணத்தா லன்று; இரு பாலாரின் குணத்தா லாகும். பல நூறு ஆண்டுகட்கு முன்னர் பழம் பெரும் ஆரியர் வாழ்ந்த வாழ்க்கை, இன்று இந்தியாவை விட மேலைப் புலங்களில் மெய்ப்பிக்கப்படுகின்றது. ஐரோப்பாவில் வாழ்நாள் பெருகுகின்றது; இந்தியாவில் குறுகுகின்றது. பல்கேரியர்களுடன் உறைந்த, ருஷ்ய விஞ்ஞான சாஸ்திரியாராகிய, புகழ் பெற்ற ஆசிரியர் மெக்னிக்காப் (Metchinikoff) தங்களுள் பலர், 100, 115, 120 ஆண்டுகள் வாழ்ந்தது அசாதாரண மல்ல; இளமையில் பண்படுத்திய நலன்களே அம் முதுமைக் குறுதுணையாகக் காக்கப் பட்டன வென்று ஆராய்ந்து கண்டனர். நூமுண்டுகள் நிறைந்தவர்களாக எத்துணைப் பெயர் இந்தியாவில் தங்கள் நித்திய வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்?

ஊக்கமும், உரமும், சக்தியும் பயக்கத்தக்க பல மூதுரைகள் நம் நாட்டில் வழங்கி வருகின்றன. அவைகள் யாவற்றையும் தொகுத்து அழகிய தோர் சிறந்த மொழியினுல் மறைகளில்—பிரம்மசர்யம் என்று அறிவுறுத்தப் படுகின்றது. பிரம்மச் சர்யமாவது சாராம்சமாகக் குறிக்குங்கால்; தூய வாழ்க்கையும் ஆன்மஞான உணர்ச்சியுமாகும். அதுவே எளிய வாழ்க்கை, இறைவ னுண்மை யுணர்த்துவது. இவ்விரு செயல்களிலும் தனிப்பட்ட—சமூக—தேசிய சக்திகளின் மர்மங்கள் மறைந்து கிடக்கின்றன.

தூயவாழ்க்கை :—உங்கள் வாழ்நாளைச் சிற்றின்ப நுகர்ச்சிகளால் கறைப்படுத்தாதீர்கள். ஒரு யவன ரிஷியின் அழகியதோர் உரையாவது—' ஒரு மனிதனின் உண்மைச் செல்வமாவது, கையில் யாதுமின்றி அவனுல் சேர்க்கப்பட்டிருக்கின்ற பொருட்களின் திறன் கண்டு அளவிடப்படும்," என்பதாகும். எளிய வாழ்க்கை யுடையவன் ஆன்மா செழுமை பயப்பது. தூய வாழ்க்கை துன்பங்களினின்று காப்பாற்றுமெனச் சரித நிகழ்ச்சிகள் பறை யறைகின்றன. போகத்திற்கும் நெறியின்மைக்கும் தாயகமான இன்ப நுகர்ச்சிகளால் யவனமும் ரோமாபுரியும் அழிந்தன. எளிய வாழ்க்கை யிலிருந்த பொழுது ஆரியாவர்த்தம் உயர்ந்து மிளிர்ந்தது. ஜெர்மனியில், ஜெர்மானிய இளைஞர் இழிந்த—இயங்கும் படக்காட்சிகளை இக்காலத்து ஒழித்து வருகின்றனர். நீங்களும், உங்களை யொத்த பிற இந்திய மாணுக்கர்களும் அயல்

நாட்டு ஒழுக்க வழக்கங்களைக் களையுமாறு, எளிய வாழ்க்கையின் மர்மங்களை யாண்டும் பரப்புங்கள். மறைகள் விதிக்கும் ஐவகைக் கடன்களுடன் இதனை ஆளுவதாகக் கொள்ளுங்கள். கிராமவாசி கட்கு ஆற்றவேண்டிய தோர் கடனையும் நாம் சிந்திக்க வேண்டுமன்றோ ? கிராமங்களும் உயிரற்றுக் கிடக்கின்றன. அவற்றிற் குறு கடனும் யா மாற்றவில்லை. கிராமவாசிகள் விளைவித்துத் தருகின்ற தானியங்களை நாம் உண்கின்றோம். கைம்மாறு யாதி யற்று கின்றோம் ? குருகுல ஆசிரியர் களும் மாணுக்கர்களும் குறிப்பிட்ட சில காலங்களில் அயல் கிராமங்களுக்குச் சென்று இந்திய வீரர்கள் முனிவர்களின் இனிய கீதங்களைப் பாடியும் பெருமை மிக்க பாரத நாட்டின் மாண்பினை அவர்க் கறிவுறுத்தி யும் புராதனக் கொள்கைகளைத் திரும்பவும் தாபித்தற்கு அடிப்படையான வற்றைச் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

இதுவே தக்க தருணம். செவி சாய்த்திடுமின் ! தெய்வ அருள் மணியோசை ஒலிக்கின்றது ! இந்திய சாதி இந்தியாவை விரும்புகின்றது. வெற்றொலிக ளா லாகிய இந்தியாவை யன்று. தவசிரேட்டர்கள், முனிவர்களின் இந்தியாவை விழைகின்றனர். பல நூற்றாண்டுகளாகப் பெரும் புயல்களிலும் இடுக்கண்களிலும் துயருற்ற இந்தியா தனது இதயத்தில் ‘ ஆன்மா அழிவற்றது ’ என்று முழங்குகின்றது.

இந்திய சரித்திரத்தின் அழியாச் செய்தியை—ஆன்ம வலியின் தூதினை, எளிய வாழ்க்கையே யாண்டும் பரப்புகின்றது. தேசத்தார் விழைந்து நிற்கும் மெய்த் தவத்தினை—உண்மை நெறியை—ஆடம்பர மற்ற பிற ரறியா உயர்ந்த தியாகத்தினை எளிய வாழ்க்கை யுடையார், தூய வாழ்க்கை யுடையார் வெளிப்படுத்துகின்றனர்.

குருகுலம், ஆண்டாண்டு தோறும் தூய்மையும் ஆன்ம உணர்ச்சியும் ஏழையர்பா லிரக்கமும் தொன்மைப் பற்றும் வாய்ந்த மாணுக்கர்களைப் புறவுலகிற் களிக்குமாயின் உண்மையில் அதனையே பாராட்டிப் புகழ்வேன். இத்தகைய மாணுக்கர்களே நீண்ட நாளாக வருந்திக் கிடக்கின்ற பழைமையான பாரத சாதிக்குப் புதிய உணர்ச்சியை அளிப்பவ ராவார். அவர்களால் இச்சீரிய செய்தி நாட்டில் யாங்கணும் முழக்கப்படுக :—

ஏழ்மையும் மெலிவும் ஏற்ற நீவிர்,
செழுமையும் உரனும் மீண்டும் பெறுவீர்.

செழுமை ; நுங்கள் தாதையர் சேமித்த பொருளே
வலிமை ; பன்னெடு நாட்களாய்த் தொடர்ந்த தொன்றே.
அன்றியும், மக்காள் ! நும் அன்னை இறந்திலள்
இந்தியா! தொன்மைப் பாரத நாடு
என்றும் அழிவில தாமென் றுன்னுக.

இயற்கைப் பொருணூற்

கடலின் ஒரு சிறு துளி

தாவரங்கள் இல்லா விட்டால் பிராணிகள் உயிர் வாழ முடியுமா?

இவ்வுலகப் பரப்பில் காணப்படும் செடி கொடி முதலிய தாவரப் பொருள்களைப் பார்க்கிலும் அங்கு மிங்கும் அசைந்து திரியும் உயிர்ப் பிராணிகள் தான் மக்களின் மனதைக் கவரும் தன்மை வாய்ந் துள்ளன. ஆகாயத்தில் அங்கு மிங்கும் பறந்து செல்லும் ஒரு சிறு தும்பி அல்லது தண்ணீரில் நீந்தித் திரியும் ஒரு சிறு மீன் குஞ்சு ஆகிய இவை மக்கள் கருத்தினைக் கவர்வது போல, செயலற்று ஒரே இடத்தில் தங்கி நிற்கும் தாவரங்கள் நமது கருத்தினைக் கவர்வதில்லை. ஜீவ உலகத்தில், இயங்கி உயிர்வாழும் பிராணிகளைவிட நிலைத்து உயிர் வாழும் தாவரங்கள் மிகவும் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவை என்று உயிர்நூற் புலவர்களும் உரைக்கிறார்கள். நிலைத்து வாழும் தாவரங்களுக்கும் இயங்கி வாழும் பிராணிகளுக்கும் "உயிர்" இருக்கிற தென்றாலும் இரண்டிற்கும் எத்தனையோ ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றதும் உண்மைதான். என்றாலும், மிகத் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த தாவரங்க ளில்லாவிட்டால் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்த இயங்கி வாழும் உயிர்ப் பிராணிகள் உலகத்தில் உயிர் பிழைத்திருக்க முடியுமா என்பதே நாம் இங்கு வினாவும் வினா வாகும்.

சாவரப் பொருள்கள் இருப்பதினாலே தான் மிருகம் பறவை மனிதர் முதலிய இயங்கி வாழும் பிராணிகள் உலகத்தில் நிலை பெற்றிருக்கின்றன வென்றும் தாவர உலகம் இல்லா விட்டால் ஏனைய இயங்கி வாழும் பிராணி உலகம் அழிந்து போய்விடு மென்றும் ஆராய்ச்சி வல்ல அறிவு சான்ற இயற்கைநூற் புலவர்கள் உரைக்கிறார்கள். இப்பொழுது கூட இவ்வுலகப் பரப்பிலுள்ள எல்லாத் தாவரங்களும் அழிந்து மடிந்து விடுமானால் அல்லது (அவற்றில் ஒரு சிறு செடி கூட இல்லாமல்) அழித்து விடுவோமானால் மனிதர்களாகிய நாமும் ஏனைய பறவை விலங்கு முதலிய எல்லாப் பிராணிகளும் இறந்தொழிந்து விடுவோம். அதாவது, தாவர உலகம் இல்லாவிடில் இயங்கி வாழும் பிராணி உலகம் நிலை பெற்றிராது. உயிருள்ள பொருள்களில் மிகத் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த ஓரறி வுடைய செடி கொடிகளின் உதவியை நாடியே உயர்ந்த இனத்தைச் சேர்ந்த உயிர்ப் பிராணிகள் உலகத்தில் உயிர் வாழ்ந்து வருகின்றன வென்றால் இது அதிசயப்படத் தக்கதே.

"என்னை ! சிங்கம் புலிகளும் கழுகு பருந்துகளும் இன்னும் எத்தனையோ ஜீவராசிகள் எல்லாம் மாமிச உணவை உண்டு உயிர்வாழ்கின்றனவே. உலகத்தில் பெரும் பாலும் மனிதர் உண்டு வருவதும்

மாமிச உணவாகவே யிருக்கிறது. அங்ஙனமாகத் தாவரங்க ளில்லா விடில் உலகத்தில் உயிரே நிலைக்காது என்று சொல்வது பொருந் தாது." என்று சிலர் கேட்கக் கூடும். இக்கேள்விக்கு விடையிறுக்க வேண்டுமானால், தாவரங்க ளில்லாமல் எந்த உயிரும் உலகத்தில் நிலைத்திருக்க முடியாது என்பதையே மீண்டும் வற்புறுத்திச் சொல்ல வேண்டும். மனிதர்களில் பெரும் பான்மை யோரும் அநேக பறவை மிருகங்களும் மாமிச ஆகாரத்தை யுண்டே உயிர்வாழ்கின்றன என் பது உண்மையே. இப்போது மாமிச ஆகாரத்தை யுண்டு உயிர்வாழும் பிராணிகள் மாத்திரமல்ல, உலகத்திலுள்ள இயங்கிவாழும் ஜீவராசி கள் எல்லாம் இதுமுதல் மாமிச உணவையே உண்டு உயிர் வாழத் தொடங்கினாலும் கூட, தாவரங்கள் இல்லாவிடில் அவை உயிர் வாழ்ந் திருக்கவே முடியாது! அதாவது, எல்லா ஜீவராசிகளும் புலா லுண வையே உண்ணப் புகுந்தாலும் கூட அவைகளுக் கெல்லாம் மாமி சத்தை உதவும் தாய் தாவரங்களே யாகும். மாமிசம் எங்கிருந்து கிடைக்கிறது? ஆடு மாடு முதலிய பிராணிகளிடத்தி லிருந்தே மாமி சத்தைப் பெற வேண்டி யிருக்கிறது. ஆடு மாடுகளோ புற் பூண்டு களையும் இலை தழைகளையும் உண்டு உடல் வளர்க்கின்றன. மாமிசத்தை யுதவும் ஆடுமாடுகள் தாவரங்களை யுண்டு உயிர்வாழ வேண்டி யிருக்கி றது. அதாவது தாவரங்கள் தசையாக (மாமிசமாக) உருவடைந்து ஏனைய பிராணிகளுக்கு ஆகார மாக உதவுகின்றன. இதனால் தான், மாமிசம் புசித்து வாழும் பிராணிகளும் தாவரங்களை யுண்டுவாழும் பிராணிகளும் செடி கொடியாகிய ஓரறிவு உயிர்களின் உதவியை நாடி யே உயிர் வாழ்கின்றன வென்றும் தாவரம் இல்லாவிட்டால் உலகத் தில் அவை (பிராணிகள்) உயிர் வாழ முடியா தென்றும் தெள்ளெனத் தெளியும் வண்ணம் உயிர்நூற் புலவர்கள் உணர்த்துகிறார்கள்.

* * * * *

பிற ஜீவப் பிராணிகளின் உதவி யின்றித் தாவரங்கள் உயிர் வாழக் கூடுமா?

ஓரறிவுடைய தாவரங்களின்உதவி யில்லாமல் ஏனைய உயர் வகுப் புப் பிராணிகள் உலகத்தில் நிலை பெற முடியா தென்பதை மேலே கண்டோம். ஆனால், ஏனைய உயர் வகுப்புப் பிராணிகளின் உதவி யில்லாமலே தாவரங்கள் உலகத்தில் உயிர் பிழைத்திருக்கக் கூடுமா? என்ற கேள்விக்கு விடை என்ன? உலகத்தில் இயங்கித் திரிந்து வாழும் உயிர்ப் பிராணிகள் தோன்றுவதற்கு முன்னே, முதன் முத லாகத் தோன்றிய உயிருள்ள பொருள் செடி கொடி மரங்களாகிய தாவரப் பொருள்கள் தா னென்றும், தாவரங்கள் தோன்றிய பிறகு தான் ஏனைய பிராணிகள் உலகத்தில் உதித்தன வென்றும், உலகத் தில் இயங்கும் பிராணிகள் எல்லாம் அழிந்துவிட்டாலும் கூடத் தாவர உலகம் அழியாமல் செழிப்புடன் வாழ்ந்திருக்கு மென்றும்

இயற்கைப் பொருணூ லுணர்ந்த அறிவாளிகள் அறிவிக்கிறார்கள். அன்றியும், தாவரங்களுக்கும் ஏனைய பிராணிகளுக்கும் இன்னொரு மாறுபாடு காணப்படுகின்றது. அதாவது மற்றப் பிராணிகளைப் போலவே தாவரங்களும் வாயுவை உட்கொள்கின்றன; உணவையும் ஏற்றுக் கொள்கின்றன. ஆயினும், தாவரங்கள் உண்ணும் உணவுக்கும் ஏனைய பிராணிகள் உண்ணும் உணவுக்கும் பெரியதோர் வித்தியாச முண்டு. அவ்வேறுபாடு என்ன வெனில் தாவரங்கள் "இயற்கை"ப் பொருளையே உணவாக உட்கொண்டு உயிர் வாழ்கின்றன; மற்றப் பிராணிகளோ தாவர உணவை (அல்லது தாவரங்களின் மூலமாய் தயாரிக்கப் பட்ட உணவுகளை) உண்டு உயிர் வாழ்கின்றன. அதாவது சுவாசிக்க நல்ல காற்றும் பருக நல்ல தண்ணீரும் உலகத்தில் வேண்டிய மட்டும் கிடைக்கின்றன வாயினும் இவற்றை மாத்திரம் உட்கொண்டு பிராணிகளால் உயிர் வாழ முடிகிறதில்லை; காற்றையும் தண்ணீரையும் தவிர தாவரங்களால் தயாரிக்கப் பட்ட வேறே ஆகாரமும் அவைகளுக்கு வேண்டி யிருக்கிறது. ஆனால், செடி கொடிகளாகிய தாவரங்களுக்கு இத்தகைய உணவு வேண்டியதில்லை. பூமியில் இயற்கையாக உள்ள தண்ணீர் வெளிச்சம் ஆகாயம் முதலிய இயற்கைப் பொருள்களைக் கொண்டே தாவரங்கள் உயிர் பிழைத்து வருகின்றன. அதாவது கடவுளால் கொடுக்கப் பட்ட பஞ்ச பூதங்களைக் கொண்டே தாவரங்கள் உயிர் பிழைத்து வருகின்றன. மற்றப் பிராணிகள் பஞ்ச பூதங்களைக் கொண்டு மாத்திரம் உயிர் வாழ மாட்டா. இதனால்தான், மிருகம் பறவை மனிதர் முதலிய எல்லாப் பிராணிகளும் அழிந்து விட்டாலும்கூடத் தாவரங்கள் மாத்திரம் பூமியிலிருந்து தண்ணீரையும் ஆகாரத்தையும் உட்கொண்டு காற்றையும் வெளிச்சத்தையும் பெற்று அழியாமல் நிலைத்து நிற்கக் கூடும் என்று உயிர் நூற் புலவர் உரைக்கிறார்கள்.

* * * * *

விதைகள் சுவாசிக்கின்றனவா?

உலகத்திலுள்ள உயிருள்ள பொருள்களெல்லாம் வாயுவை சுவாசிக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிவோம். செடி கொடி மரங்களாகிய தாவரங்களின் வித்துக்களும் பறவைகளின் முட்டைகளும் கூடப் பிராணவாயுவை உட்கொண்டு தான் உயிருடன் நிலைத்திருக்கின்றன வென்று இயற்கைப் பொருணூற் புலவோர் புகல்கின்றனர். முட்டைகளுக்கும் விதைகளுக்கும் "உயிர்" இருக்கிறதா? அவை உயிருள்ள பொருள்கள் தானா என்று ஐயங் கொள்ள வேண்டாம். அவை உயிருள்ள பொருள்களே. அவைகளுக்கு "உயிர்" இல்லா விட்டால் முட்டைகளினின்றும் செடிகள் முளைக்க மாட்டா, ஒரு முட்டையை எடுத்து அதன் ஓடு முழுமையும் மறையும் படி "வார்னீஷ்" என்னும் தைலத்தைப் பூசி விடுவோமானால், அந்த முட்டை யோட்டிலுள்ள கண்ணுக்குப் புலப்படாத நுண்மை

யான துவாரங்கள் அடையுண்டு போய் விட, அம்முட்டையானது ஆகாயத்திலுள்ள பிராண வாயுவை உட்கொள்ள முடியாமல் இறந்து விடுகிறது. அது வாயுவை உட்கொள்ள முடியாமல் இறந்து விட்ட தென்பதை எவ்வாறு அறியலாம் என்ருல் "வார்னிஷ்" பூசப்பெற்ற அந்த முட்டையை "அவயம்", வைத்துக் குஞ்சு பொறிக்கச் செய்வோமாஞல் அம்முட்டையி லிருந்து ஒரு போதும் குஞ்சு வெளிப்படுகிற தில்லை. ஆகவே அம்முட்டை இறந்து விட்ட தென்று அறிந்து கொள்கிருேம். இவ்விதமே தான் வித்துக்களும். விதைகளை பூமியில் ஆழமாக நடக்கூடா தென்று உலகத்தில் சொல்வதையும் நாம் கேட்டிருக்கிருேம். ஆழமாக நடப் பட்ட வித்துக்கள் முளையாமல் அழுகிப் போய் விடுகிறதையும் நாம் கண்டிருக்கிருேம். காரணம் என்ன வென்ருல் ஆழமாக நடப்பட்ட விதைகள் பிராண வாயுவை உட்கொள்ள முடியாமல் இறந்து விடுகின்றன.

"மண்ணுள் மறைந்து வாழும் நாகப் பூச்சி முதலிய பிராணிகளும் வாயுவை சுவாசித்துத் தாஞ உயிர் வாழ்கின்றன?" என்று சிலர் விஞவலாம். ஆம். மண்ணுள் மறைந்து வாழும் எல்லாப் பூச்சிகளும் காற்றைச் சுவாசித்துத் தான் பிழைத்திருக்கின்றன. மண்ணில் கலந்துள்ள குறைந்த அளவான பிராண வாயு அவை சுவாசித்து உயிர் வாழ்வதற்குப் போதுமானதா யிருக்கிறது.

* * * * *

மீன்கள் நிலத்தில் வசிக்க முடியாத தேன்?

எல்லாப் பிராணிகளும் வாயுவை சுவாசித்துத் தான் உயிர் வாழ வேண்டும்; இல்லை யாஞல் அவை இறந்து விடும் என்று மேலே அறிந்தோம். தண்ணீரில் வாழும் மீன்களும் வாயுவைச் சுவாசித்துத் தான் உயிர் பிழைத்திருக்கின்றன. நீருடன் கலந்துள்ள ஆகாயத்தை நீரினின்று பிரித் தெடுத்து உட்கொண்டு அவை ஜீவிக்கின்றன. இவ்விதம் பிராண வாயுவை யுட்கொண்டு உயிர் வாழும் மீன்கள் தண்ணீரை விட்டு வெளியே வரு மாஞல் (சுவாசிப்பதற்கு வேண்டிய மட்டும் பிராண வாயு இருந்துங் கூட) அவை இறந்து விடுகின்றன. அவ்விதந் தானே, நிலத்தில் வாழும் பிராணிகள் தண்ணீரில் மூழ்கி விட்டால் (சுவாசிப்ப தற்கேற்ற பிராண வாயு தண்ணீருடன் கலந்திருந்துங் கூட) அவை தண்ணீரில் சுவாசிக்க முடியாமல் இறந்து விடுகின்றன. என்ருலும் நீர் வாழும் மீன்களும் நிலம் வாழும் பிராணிகளும் சுவாசிக்கும் பொருள் பிராண வாயு தான். அப்பிராண வாயு நீருடனும் நீருக்கு வெளியிலும் வேண்டிய அளவு இருக்கிறதென்ருலும் அதே பிராண வாயுவை சுவாசிக்கும் மீன்கள் கரையிலும் தரை வாழ் பிராணிகள் தண்ணீரிலும் சுவாசித்து உயிர் வாழ முடியாமல் இறந்து விடுகின்றனவே. இதன் காரணம் என்ன?

நிலத்தில் வாழும் பிராணிகள் பிராண வாயுவை உட்கொள்வதற்குச் "சுவாசப் பை" அல்லது "நுரையீரல்" என்னும் உறுப்பு கட

வுளால் அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த நுரை யீரலின் உதவியினுல் தான் நிலம் வாழ் பிராணிகள் வாயுவை சுவாசித்து உயிர் வாழ்கின்றன. நீரில் வாழும் மீன்களுக்கோ வென்ருல்,நிலத்தில் வாழும் பிராணிகளுக் கிருப்பது போன்ற "சுவாசப்பை" இல்லே. ஆனல், நீருடன் கலந்திருக் கும் வாயுவை நீரிலிருந்து பிரித் தெடுத்து அந்த வாயுவை யுட்கொண்டு அவை உயிர் வாழ வேண்டி யிருக்கிற படியால், தண்ணீரிலிருந்து வாயுவைப் பிரித்தெடுப்பதற்கு ஏற்றதா யுள்ள Gills என்னும் உறுப்பு அவைகளுக்கு அமைந்திருக்கிறது. அதாவது, நிலத்தில் வாழும் பிரா ணிகள் நேரே வாயுவை சுவாசிக்கின்றன, நீர் வாழும் மீன்கள் வாயு வைத்தண்ணீரிலிருந்து பிரித்தெடுத்து சுவாசிக்கின்றன. எனவே, நிலம் வாழ் பிராணிகளுக்கு வாயுவை நீரினின்று பிரித் தெடுக்கும் உறுப்பு (Gills) இல்லே; எனவே நீர் வாழ் பிராணிகளுக்குக் காற் றை நேரே சுவாசிக்கும் "நுரை யீரல்" என்னும் உறுப்பு இல்லே. ஆகவே, மீன்கள் வெளியே வந்தால் காற்றை நேரே சுவாசிக்க முடி யாமல் இறந்து விடுகின்றன; நிலம் வாழ் பிராணிகள் தண்ணீரில் மூழ் கிவிட்டால் காற்றைத் தண்ணீரிலிருந்து பிரித்தெடுத்துச் சுவாசிக்க முடியாமல் இறந்து விடுகின்றன. மீன்களுக்குள்ள சுவாச உறுப்பு (Gills) நிலம் வாழும் பிராணிகளுக் கிருக்குமானல் அவை தண்ணீருக் குள்ளும் சாகாமல் பிழைத்திருக்கக் கூடும். நிலம் வாழும் பிராணிக ளுக்குள்ள நுரை யீரல் நீர் வாழ் பிராணிகளுக் கிருக்குமானல் அவை நிலத்திலும் (தண்ணீருக்கு வெளியே) உயிர் பிழைத்திருக்கும்.

ஒலியும் ஒளியும்.

ஓசை அல்லது ஒலி என்பது ஆகாயத்தில் உண்டாகிற ஒருவித அலேயாகும். வெளிச்சம் அல்லது ஒளி என்பது (ஈதர் என்று சொல் லப்படுகிறதும் ஆகாயப் பரப்பு முழுவதிலும் பரந்துள்ளதுமான) ஒரு வித நுண்ணிய அணுத்திரளில் உண்டாகும் அலேயாகும். ஒரு குளத்தில் கல்லேப் போடுவோமானல் கல் விழுந்த விடத்திலிருந்து அலேகள் தோன்றி நாற் புறமும் பரந்து செல்வதைக் கண்டிருக்கி ருேம். இவ்விதம் நீரில் அலே உண்டாவது போலவே ஆகாயப் பரப் பில் ஒலி (ஓசை) அலேகள் உண்டாகின்றன. ஈதர் ஒன்னும் ஆகாய நுண் அணுப்பரப்பில் ஒளி (வெளிச்சம்) அலேகள் உண்டாகின்றன. நாம் பேசும் போது, அல்லது கையைத் தட்டும் போது உண்டாகிற ஓசையானது ஆகாயத்தைத் தாக்க அவ்விடத்திலிருந்து ஒலி அலேகள் உண்டாகின்றன. அவ்விதம் உண்டான ஒலியலே நாற்புறமும் பரந்து சென்று அருகிலுள்ள மனிதரின் செவிக்குள் புகுந்து அதனுள்ளிருக் கும் நுண்ணிய ஜவ்வின் மேல் தாக்க, அவ்விதம் தாக்கிய ஒலியை "ஒலி நரம்புகள்" மூளேக்குத் தெரிவிக்க மூளேயானது இன்ன ஓசை இன்ன விடத்தில் உண்டாயிற்றென்றும் அதன் பொருள் இன்ன தென்றும் அறிந்து கொள்கிறது. இவ்விதமே தான் ஈதர் என்னும் நுண் அணுப் பரப்பில் ஒளி அலேகள் உண்டாகிக் கட் புலனில் தாக்க நாம் வெளிச்சத்தை யுணர்கிருேம். இங்ஙனம் அந்தரத்தில் பிரயாணம்

செய்யும் ஒலி யலை ஒளி யலைகளில் முன்னது மெதுவாகவும் பின்னது வெகு துரிதமாகவும் செல்கின்றது. அதாவது ஒலி யலையானது மிக மெதுவாக (ஒரு நிமிஷத்தில் சில நூறு அடி தூரந்தான்) சஞ்சரிக்கி. றது. ஒளியலையோ (ஒரு நிமிஷத்தில் 1800 மைல் தூரம்) மிக விரைவாகப் பிரயாணம் செய்கிறது.

ஒரு பீரங்கி சுட்டால் அதிலிருந்து ஒலியும் ஒளியும் ஒரே காலத்தில் உண்டாகின்றன. அச்சமயம், பீரங்கியின் அருகிலிருக்கும் ஒருவன் ஒரே சமயத்தில் ஒளியைக் காண்கிறான்; ஒலியைக் கேட்கிறான். ஆனால், வெகு தூரத்திலுள்ள ஒரு மனிதன் பீரங்கி வெடிக்கப் படுவதைப் பார்த்துக் கொண்டிருப்பானானால் முதலில் அவன் வெளிச்சம் உண்டாவதைக் காண்கிறான்; சில நிமிஷங்களுக்குப் பிறகு தான் வெடியோசையைக் கேட்கிறான். அருகிலிருந்த மனிதனுக்கு ஒரே நேரத்தில் வெடியும் (ஓசை)ஒளியும் (வெளிச்சமும்), புலனாயிற்று; வெகு தூரத்தி லிருந்தவனுக்கோ என்றால் முதலில் வெளிச்சம் காணப்பட்டுச் சில நிமிஷங்களுக்குப் பின்னர் வெடியோசையும் கேட்கிறது. காரணம் மேலே சொல்லியது தான். அதாவது ஒளியலைகள் வேகமாகச் செல்கின்றன; ஒலியலைகள் மிக மெதுவாகச் செல்கின்றன. இடிமின்னல் உண்டாகும் போதும் இதனைத் தெளிவாகக் காணலாம். வானத்தில் இரண்டு மேகங்கள் உராய்ந்து கொள்ளும் போது ஆகாயத்திலுள்ள மின்சாரத்தின் இயக்கத்தினால் ஒளி அல்லது மின்னல் உண்டாகிறது. இப்படி யுண்டாகும் மின்னலின் கூடவே உஷ்ணம் உண்டாகிறது. மின்னலுடன் தோன்றிய இந்த உஷ்ணம் அருகிலுள்ள வாயுவை அப்பால் தள்ளுகிறது. அப்படி அதிவேகத்தோடு தள்ளுண்ட பெரிய ஆகாய அலையைத் தான் நாம் இடி என்று சொல்லுகிறோம். ஆனாலும், ஒரே காலத்தில் ஆகாயத்தில் தோன்றும் இந்த இடி மின்னல்களை நாம் ஏக காலத்தில் உணர்ந்து கொள்ளுகிறதில்லை. முதலில் மின் ஒளியைக் காண்கிறோம்; அது கண்ட சில நிமிஷங்களுக்குப் பிறகு தான் இடியோசைக் கேட்கிறோம். எனவே, ஒளியலைகள் விரைவாகவும் ஒலியலைகள் மெதுவாகவும் ஆகாயத்தில் பிரயாணம் செய்கின்றன என்பதை இதனால் நன்குணரலாம்.

* * * * *

எதிரொலி என்ப தென்ன ?

ஒலி அல்லது ஓசையானது ஆகாயத்தைத் தாக்கப்பட்ட விடத்திலிருந்து ஒலியலைகள் உண்டாகின்றன வென்றும் அவ்வலைகள் நாற்புறமும் பரந்து செல்கின்றன வென்றும் அறிந்தோம். அவ்விதம் நாற்புறமும் பரந்து செல்லும் ஒலியலைகளைச் சில சமயங்களில் ஏதேனும் ஒரு பொருள் தடுத்து அவ்வலைகளை மறுபடியும் அது புறப்பட்ட விடத்திற்கே யனுப்புகிறது. அதாவது ஒரு சுவற்றின் மேல் எறியப்பட்ட ஒரு பந்தானது மீண்டும் எறியப்பட்ட விடத்திற்கே திரும்பி

வருவது போல, ஒலியலைகள் தாம் செல்லும் வழியில் உள்ள ஏதே னும் பொருள்களின் மேல் மோதுண்டு அவை புறப்பட்ட விடத்தை நோக்கித் திரும்பி வருகின்றன. இவ்விதம், ஒலியலை திரும்பி வரு வதைத் தான் நாம் "எதிரோலி" என்று சொல்கிறோம். இவ்விதம் திரும்பிவரும் ஒலியலை சில சமயங்களில் சிதறுண்டு போய்க் கேட்ப தற்கு அருவருப்பா யிருக்கும்; அல்லது பொருள் விளங்காதபடி சிதறுண்டு போகும். தாக்குண்டு திரும்பிவரும் ஒலியலைகள் சிதைவு படாமல் முழு உருவத்துடன் திரும்பிவருமானால் நாம் அவ்வெதி ரொலியை மிக விளக்கமாகவும் தெளிவாகவும் கேட்கக்கூடும். எதி ரொலி உண்டாகும் இடத்திற்கும் கேட்போர் இருக்கும் இடத்திற்கும் தக்கபடி தெளிவும் தெளி வின்மையும் ஏற்படும்.

சீனி வேங்கடசாமி.

மீன்கள்.

மீன்களில் 19,000 வகைகள் இருக்கின்றன வென்று கண்டு பிடிக்கப்பட் டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

பறவை மாளிகை.

ஹன்டிங்டன்ஷைரைச் சேர்ந்த செயிண்டு நியோட்ஸ் எனு மிடத்தில் பறவைகள் வசிப்பதற்கு 5 மாடிகளுள்ள ஓர் மாளிகை கட் டப்பட்டிருக்கிற தாம். அதில் 12 ஆயிரம் பறவைகள் வசிக்கலாமாம்.

நல்ல தம்பதிகள்.

ஸ்டிரிதாம் என்னுமிடத்திலுள்ள காப்டன் ஜ. டபிளியூ. எச் விவியன் என்பவருக்கும் அவரது மனைவிக்கும் 60 வயது வித் தியாசமென்றும் நான்கு வயதுள்ள குழந்தை ஒன்று அவர்களுக்கிருக் கிறதென்றும் அவருக்குத் தற்பொழுது வயது 90 என்றும் சொல்லப் படுகிறது.

மிகப் பெரிய பிராணி.

நீலத் திமிங்கிலம் எனும் பிராணியே உலகிலுள்ள பிராணிகள் எல்லாவற்றுள்ளும் மிகப் பெரியதாம். இது 90 அடி நீளம் வரை வளருமென்றும் 30 டன் கனமிருக்கு மென்றும் மணிக்கு 30 மைல் வரை நீந்தும் சக்தியுள்ள தென்றும் அது நீந்துகையில் 650 குதிரை களின் சக்தியை அது உபயோகிக்கிற தென்றும் கூறப்படுகிறது.



கோகலேயும் காந்தியும்.

பத்திராதிபர் குறிப்புகள்

கான்பூர் காங்கிரஸ்.

நமது தேசிய மகா சபை ஒவ்வொரு வருஷத்தைப் போலும் இவ்வருஷமும் கான்பூரில் 26-12-'25ல் கவியரசி சரோஜினி தேவியின் தலைமையின் கீழ் கூடியது. நாம் எதிர் பார்த்தபடியே, தேசீயப் போராட்டத்திற்குச் சட்ட சபை விஷயம் ஊர்ஜிதப்பட்டதே தவிற வேறொரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் நமது தலைவர் மகாத்மா ஒரு வருஷம் ஓய்வெடுத்துக் கொள்வதாக, இராஜீய வாழ்க்கையிலிருந்து விலகியது கான்பூர் காங்கிரசில் நிகழ்ந்த ஒரு முக்கிய சம்பவமாகும். இது நமக்கு மிக வருத்தத்தைக் கொடுக்கிறது. இப்பெரியார் நாட்டின் தேசிய வாழ்வில் தலை யிடாமலிருப்பது, எவ்வுளவு நஷ்டமென்று நாம் சொல்லத் தேவை யில்லை. திரும்ப, மகாத்மாவை தேசிய வாழ்வில் ஈடுபடச் செய்ய வேண்டிய பொறுப்பு சுயராஜ்ஜியக் கட்சியினிடந் தானிருக்கிறது.

*   *   *   *

நம்பூத்ரி மகா நாடு.

சுவரா என்ற ஊரில் இம்மகா நாடு கூடி முடிந்தது. தீண்டாதவர்களை தெருக்களில் செல்ல விடாமல் தடுக்கக் கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இஃதோர் நல்ல காரியமென்றே சொல்ல வேண்டும். நம்பூதிரி பிராமணர்களே, எதிரிடையாக இது காறும் இருந்த தாகச் சொல்லப் பட்டது. கொச்சி, திருவாங்கூர், ராஜ்யத்தில் தீண்டாதவர்கள் ரஸ்தாக்களில் செல்லக் கூடா தென்று ராஜாங்கத்தாரால் தடை ஏற்பட்ட தென்று நம்புகிறோம். தைரியமாய் இந்த முக்கிய தீர்மானத்தை நிறை வேற்றியதற்கு நம்பூதிரிகளை நாம் மனதார வாழ்த்துகிறோம்.

*   *   *   *

ஸ்ரீமான் ஹார்னிமன்.

இப்பெரியார், நம்மை ஆளும் குலத்தைச் சார்ந்த வரா யிருந்தும் பாரத தேசத்தின் பரிதாப நிலையைக் கண்டு சகியாது, பம்பாய் கிரானிக்கல் பத்திராசிரியரா யிருந்து, தேசிய இயக்கத்தில் ஈடு பட்டு நம் நாட்டிற்கு அபாரத்தொண்டு செய்தார். இதைக் கண்டு, அரசாங்கத்தார் மனஞ் சகியாது, அவரை தேச பிரஷ்டம் செய்து பம்பா

யிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டார்கள். கடந்த 5, 6 வருஷங்களாக இந்தியாவுக்கு வர அநுமதி கொடுக்க வில்லை. இம்மாதந் திரும்ப, பாரத தேவிக்குக் கைங்கர்யம் செய்ய வந்து, "கிரானிக்கல்" பத்திராசிரியர் வேலையை ஒப்புக் கொண்டு விட்டார். இவருக்கு நல்வரவு கூறுகிறோம்.

*   *   *   *

திருச்சியில் தமிழ்ப் பல்கலைக் கழக மகா நாடு.

திருச்சியில் 24-1-'26ல் உயர் திரு டி. என். சிவஞானம் பிள்ளை யவர்கள் தலைமையின் கீழ் கூடியது. அவர் செய்த அழகிய பிரசங்கத்தைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் பல முறை படிக்க வேண்டும். பாஷாபி விருத்தி யில்லாத நாடு ஒரு நாளும் முன்னேற்ற மடைய முடியாது. இன்று ஜெப்பான், ஜெர்மனி முதலிய நாடுகள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி நிற்பது, கல்வி, தாய் பாஷையிலே பயில் விக்கப்படுவதாலே தான். கலா சாலையில், 10, 12 வருஷம் ஆங்கிலத்தில் பயில்விக்கப் பட்டாலும், பூரண ஞானம் சிலருக்கே ஏற்படுகிறது. கனம் மந்திரி, சகலரும் தமிழிலே போதிக்கப்படல் வேண்டுமென்பதை வற்புறுத்தி வருவதை நாம் முழு மனதுடன் ஆதரிக்கிறோம்.

பண்டித மாளவியா, காசி ஹிந்து யூனிவர்ஸிட்டிக்காக, சகலத்தையும், துறந்து, இரவாய், பகலாய்ப், பாடுவடுவது போல், கனம் மந்திரி யவர்களும், அடுத்த வருஷம் முதல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உன்னத ஸ்தானத்திற்குக் கொண்டு வர முயற்சி செய்வா ரென்று நம்புகிறோம். இனி எழுதப்போகிற, தமிழ் நாட்டு சரித்திரத்தில் உயர் திரு பிள்ளை யவர்கள் நாமம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுவதுடன், தமிழன் இனி அடையப்போகும் கீர்த்தியும், மதிப்பும் பல்கலைக் கழகத்தா லென்று தைரியமாய்ச் சொல்லலாம்.

*   *   *   *

மஹாத்மாவின் தேக ஸ்திதி.

மகாத்மா காந்தி சில தினங்கள் ஜுரத்தால் வருந்திக் குணமடைந்து வருகிறார். அவர் விரைவில் முற்றிலும் குணமடைய வேண்டுமென்று இறைவனை துதிக்கிறோம்.



பாரிஸ்டர் காந்தி.

PERFUME SPRAY.

பன்னீர்

தெளிக்கும் கருவி.

சாதாரணமான எந்த
வித பாட்டில்களிலும்
வைத்து உபயோகிக்கலாம்.

விலை 1-க்கு

ரூ. 2-4.

"Collapsible" Key Ring.



A Key Ring that does not buldge the pocket.

Price As. 3 each.

Dozen Rs. 2.

திருநெல்வேலி நூல் துண்டுகள்.

புது மாதிரி நெசவு. நீடித்து உழைக்கும்.
3 மு. துண்டு 1-க்கு அணா 12.
4 மு. ,, 1-க்கு அணா 14.

K. S. MUTHIAH & CO., Tinnevelly.

செல்ப்பில்லிங் (சில்வர்கிங்) பவுண்டன் பேனா.

(மேட் இன் இங்கிலாண்டு.)

இப்பேனாக்கள் எமது சொந்த ஆர்டரின்பேரில் சீமையிலிருந்து தருவிக்கப்பட்டன. இப்பேனாக்களுக்கு 14 கார்ட் கோல்டு பிளேட்டட் நிப்புகள் பதித்து உள்ளன. இதுவுமன்றி இதர பேனாக்களைப்போல் மேல் சுரயை கழற்றி இங்கி நிரப்புவதுபோல் இல்லாமல் தானே நிரப்பிக்கொள்ளுவதற்கு ஓர்வித வில் இசையை அமைத்து இருக்கிறபடியால் இவை எத்தனை நாள் உபயோகித்தாலும் கெடாமலிருக்கும். கிரையம் பேனா 1-க்கு விலை ரூ. 1-8.

THE SIMPLEX NOVELTY HOUSE,

P. O. Box No. 142, MADRAS.

ஹஸ்த லக்ஷண சாஸ்திரம்.

விளக்கமான அனேக படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசன நூலறிவினால், ஞான திருஷ்டி, விவாகலாபம், ஆயுள், குணம், அதிர்ஷ்டம், அறிவு, சந்தானம், வலி, அபாயம், தயை, வியாதி, கண்டம், வஞ்சகம், பக்தி, ஐசுவரியம், சக்தி, சிற்றின்பம், புத்தி, பேரின்பம், வியாச்சியம், காரிய சித்தி, சௌக்கியம், முதலியன அறியலாம். விலை ரூபா 2—0—0.

V. S. குமாரசுவாமி முதலியார் & ஸன்,

7 வேலூர் (North Arcot.)

சிரிப்பு ! ஓயாச் சிரிப்பு '!

சிரித்து சிரித்து வயறு புண்ணாய் விட்டதென்று

ஒருவர் எழுதுகிறார் ! ! !

புருஷனை ஏமாற்றிய புஷ்பவல்லி

என்னும் விகட விநோதக்கதை புதிதாய் வெளி வந்திருக்கிறது. இதைப் படித்தால் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும் சிரிப்பீர்கள். நான்கு அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புத்தகம் உங்கள் வீடு வந்து சேரும்.

கள்ளனும் விலைமகளும்

உலகப்பிரசித்துப் பெற்ற வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார் இயற்றியது. இரண்டு பாகங்கள். 8 ஆப்டோன் படங்கள் அடங்கியது.

விலை ரூபா 2—12—0.

சரோஜனி	ரூ.	2	0	திருக்கழுக்குன்றக்கொலை	ரூ.	1	8
காதலும் மையலும்	,,	1	8	அம்பலவாணன்	,,	1	4
ஆங்கில ஆசான்	,,	2	0	அமிர்த குமாரி	,,	1	4
மாணிக்கவல்லி	,,	1	0	கனகாங்கி	,,	2	0

எம். எஸ். ராமூலு அண்ட் கம்பெனி,

புத்தக வியாபாரிகள், (11) ராயபுரம், மதராஸ்.

லோகோபகாரி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகை. முப்பத்திரண்டாவ தாண்டு இப்பொழுது நடக்கி றது. பரலி சு. நெல்லையப்ப பிள்ளை இதன் ஆசிரியர். தாங்கள் இதுவரை சந்தாதாராகா விட்டால் உடனே எழுதுங்கள்.

வருட சந்தா ரூபா 4.

மாதிரிப் பிரதி இனம்.

'லோகோபகாரி'
பத்திரிகாலயம்,
கோமளேசன் பேட்டை,
சென்னை.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு மருந்தே தேவை இராது.

மின்சார ரசம்

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப் பிரசித்தி பெற்றுள்ளது. மின்சார ரசம் செய்வதில் உபயோகப் படுத்தப் பட்டுள்ள சரக்குகளுக்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு. இதில் பாஷாண சம்பந்தமான சரக்குகள் கிடையாது. பத்தியமில்லை. அனுபானமில்லை. உள்ளுக்கும் மேலுக்கும் துளிக் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம்.

சகலவித ஜுரங்கள், தலைவலி, ஜலதோஷம், இருமல், அஜீரணம், புளியேப்பம், வயிற்று வலி, வயிற்றுப் போக்கு, பல்வலி, பல்லரணை, வாய் நாற்றம், கைகால் பிடிப்பு, வாயுவு தொந்தரவுகள், வாத ரோகங்கள், காலரா, பிளேக், ஜன்னி, ஸ்திரீ ரோகங்கள், குழந்தை வியாதிகள் இவைகளுக்கு மின்சார ரசம் கைகண்ட மருந்தென்பது தினந்தோறும் ஆயிரக் கணக்காய் தேசமெங்கும் உபயோகித்து வருபவர்களின் அனுபவமாகும். உண்மை விளங்க ஒரே முறை பரீக்ஷியுங்கள்.

இன்றைக்கே எழுதுங்கள்! கேட்லாக் இனாம்!!

புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எச்சரிக்கை: அசல் மின்சார ரசம் ஒன்றுக்கே மேற்கண்ட டிரேட் மார்க் உள்ளது.

விலாசம்:—

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட்,
சேலம் (S. I,)

F. M. S. க்கும் S. S. க்கும் சோல் ஏஜண்டுகள்,

மெஸர்ஸ்:

ஆர். இ. முகம்மது காசீம் & கோ,
கிளாங், பினங், சிங்கப்பூர்.

நமது புதிய பிரசுரங்கள்.

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் திருத்தமுற அச்சிடப் பெற்றவை.

1.	காசி அல்லது புண்ணியபூமி	...	0	12	0
2.	மனோஹரி ...	...	0	8	0
3.	பரிமளா ...	...	1	0	0
4.	மணிவடக்களவு (ஒரு துப்பறியும் கதை)	...	0	4	0
5.	கந்தரலங்காரம், கந்தர் சஷ்டி கவசம், அகத்திய பஞ்சகம் முதலிய ஒரே புஸ்தகம்	...	0	4	0
6.	தாலாட்டுக் கோவை ...	...	0	3	0
7.	பழமொழித் திரட்டு ...	...	0	3	0
8.	நடராஜப்பத்து ...	...	0	2	0
9.	பங்கஜம் ...	...	0	2	0
10.	குயில் மொழி ...	...	0	2	0
11.	கனவுப் பொடி ...	...	0	2	0
12.	எனது காங்கிரஸ்யாத்திரை	...	0	3	0
13.	வர்த்தக யுக்தி ...	...	0	12	0

மானேஜர் :—**லக்ஷ்மி ஆபீஸ்,**

தபால் பெட்டி **99**, சென்னை.

24 தங்கமெடல்கள் பரிசுபெற்ற

மதராஸ் N. V. ஷண்முகம் கம்பெனியார்

பட்டணம் பொடி.

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழுகிறது.

இன்றே விலை விபரத்துக் கெழுதுங்கள்.

N. V. ஷண்முகம் & கோ.,

போஸ்ட் பாக்ஸ் 555, மதராஸ்.

சுகசாதனம்

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்

உங்களுக்கு அவசியம் தேவையானது உடனே எழுதுங்கள்.

வைத்திய அனுபவங்கள், வாழ்க்கை மர்மங்கள், ரகசியக் குறிப்புகள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்கள் சம்சம்மந்த மான பலவகை விவரங்கள், இல்லற சார சங்கிகம் ஆகிய பலவும் அடங்கிய **ரகஸ்ய ரத்னம்** உங்களுக்கு அவசியம் தேவையான புஸ்தகம். விலையில்லை, தபாற்செலவில்லை விலாசம் தெரிவித்தால் மறு தபாலில்அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ., தபாற் பெட்டி 222, மதராஸ்.

கேஸரியின்

லோத்ரா.

கர்ப்பாசய ரோக நிவாரிணி

இதனுபயோகத்தால் குணம் கைக்கொண்ட பெண்மணிகள், இதை ஸ்திரீகளுக்கோர் வரப் பிரசாதினி யென்றும் அதி சிரேஷ்டமான அவுஷத மென்றும், விலையில்லா ஆபரண மென்றும் சொல்லுகிருர்கள். ருதுசூலை, அகாலபஹிஷ்டி, ருது சிராவம் ஜாஸ்தி அல்லது குறைச்சலாய்ப் போவது, பஹிஷ்டை தடைபட்டுப் போவது, வெண் ரக்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகாலப் பிரசவம், கருப்பை நழுகி விடுதல், கர்ப விரணம், ருது சூலையினல் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, சரீரம் பருத்தோ அல்லது மெலிந்தோ போவது, கணச்சூடு, சந்தான மில்லாமை, மலபத்தகம், இருமல், உப்பஸம், மேஹ ஜ்வரம் முதலிய சமஸ்த ரோகங்களும் இந்த லோத்ராவினுபயோகத்தால் வெகு நம்பகமாய் நிவர்த்திக்கப் படும். இதன் விலை பெரிய புட்டி (12 அவுன்ஸ்) ரூ. 3—0—0

சிறிய புட்டி (6 அவுன்ஸ்) ரூ. 1–10—0

கேஸரி குடீரம், ஆயுர்வேத ஔஷதசாலை,

எழும்பூர், மதராஸ்.

A. S.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள்.

ஒரு சிட்டிகை யெடுத்து காலணு மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக யின்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்த கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கை கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 4 ஷெ டஜன் 1-க்கு ரூ. 2-4 ஷெ சேர் 1-க்கு ரூ. 3.

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணு 3 ஷெ டஜன் 1-க்கு ரூ. 2 ஷெ சேர் 1-க்கு ரூ. 1-8.

போன் வெள்ளி மெடல்கள் பெற்ற

எ, எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாயபு,

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201, மதருஸ்.

பச்சை மோதிரத்தின் மர்மம்.

ஒரு இனிய துப்பறியும் தமிழ் நாவல். இதுவரை இம்மாதிரி திடுக்கிட்டு ஆச்சரியப்படும் படியான துப்பறியும் கதை வெளி வந்ததில்லை. புஸ்தகத்தைக் கையில் எடுத்தால் படிக்காமல் கீழ் வைக்க முடியாது. 225 பக்கங்கள் நேர்த்தியான அச்சு. விலை ரூ. **1.**

“லக்ஷ்மி” சந்தா நேயர்கட்கு விலை அணா. **12.**

“லக்ஷ்மி” ஆபீஸ்,
தபால் பெட்டி 99,
சென்னை,

உத்தரவாதமுள்ள கடியாரம்



கையில் கட்டும் கடியாரம் தங்கமுலாம் பூசியது. உறுதியான வேலை. பல வருஷங்கள் உழைக்கும். இன்றே ஒரு கடியாரத்திற்கு ஆர்டர் செய்யுங்கள். விலை ரூபா **8-8.**

SANDERSON & Co.,
Post Box No. 156 MADRAS.

நூதன தமிழ் நாவல்கள்.

ராவ்ஸாஹிப் P. சம்பந்த முதலியார், B.A., B.L.,
இயற்றிய தமிழ் நாடகங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
லீலாவதி சுலோசனை	0	12	வேதாள உலகம்	0	10
மனோகரன்	0	12	அமலாதித்யன்	1	0
கள்வர் தலைவன்	0	12	விரும்பிய விதமே	1	0
சுந்தரி	0	12	பொன் விலங்குகள்	0	10
இரண்டு நண்பர்கள்	0	14	பிரஹசனங்கள்	0	8
ஹரிச்சந்திரன்	1	0	ரஜபுத்ர வீரன்	0	8
புத்தர்	1	0	நற்குல தெய்வம்	0	8
பேயல்ல பெண்மணியே	0	8	சாரங்கதரன்	0	8
காலவ ரிஷி	0	8	சிறுத்தொண்டர்	0	8
யயாதி	0	8	கீதமஞ்சரி Part I.	0	8
ஊர்வசி சாபம்	0	8	வள்ளி	0	12
மார்க்கண்டேயர்	0	10	சந்திரஹரி	0	8
சபாபதி 1 & 2 பாகம்	1	0	ரத்னாவளி	0	14

வடுவூர் K. துரைசாமி ஐயங்கார், இயற்றியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.
பூர்ண சந்திரோதயம், 4 பாகம்	7	8	திகம்பரசாமியார், 2 பாகம்	3	0
மதனகல்யாணி 3 பாகம்	4	8	சௌந்திர கோகிலம்	1	8
காளிங்க ரகசியம் 2 பாகம்	4	0	வஸந்த மல்லிகா	1	8
பாலாமணி 2 பாகம்	2	8	வஸந்த கோகிலம்	1	0
மேனகா 2 பாகம்	3	0	மாயசுந்தரி	0	12
கனகாம்புஜம் 2 பாகம்	2	12	12 வித்தியாசாகரர்	1	4

ராவ்சாஹிப் T. M. பொன்னுசாமி பிள்ளை, இயற்றியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.
கமலாக்ஷி	1	12	சிவஞானம்	1	4
ஞானாம்பிகை	1	8	ஞானசம்பந்தம்	1	4
ஞானப்பிரகாசம்	1	8	விஜயசுந்தரம்	2	8

மத சம்மந்தமான நூல்கள்.

இதிஹாஸம், புராணம், நீதிநூல், சதகம், வேதாந்தம்
சித்தாந்தம், இலக்கணம்.

	ரூ.	அ.		ரூ.	அ.
ஸ்ரீ விருத்திப்பிரபாகரம்	4	0	பகவத்கீதை (அர்த்தத்துடன்)	1	0
துவாத சோபநிஷத்	2	8			
ஆத்மபுராணம்	8	0	தத்வாநு சந்தானம்	2	8

LAKSHMI BOOK DEPOT,
Post Box No. 99, MADRAS.

மத சம்மந்தமான நூல்கள்.

இதிஹாஸம், புராணம், நீதிநூல், சதகம், வேதாந்தம், சித்தாந்தம், இலக்கணம்.

	ரூ.	அ.
சௌந்தர்ய லஹரி (தாத்பரியத்துடன்)	1	12
சிவானந்த லஹரி (உரையுடன்)	0	12
கைவல்ய நவநீத வசனம்	1	8
பதினென் சித்தர (சில்லரக்கோவை)	1	8
மஸ்தான் சாகிபு பாடல்	1	0
ஞானவாசிட்டன் (உரையுடன்)	4	0
சூளாமணி வசனம்	1	0
ஆழ்வார்கள் சரித்திரம்	1	8
ஸ்ரீமத் பகவத்கீதை	3	0
விவேகானந்த விஜயம்	1	12
ஷையார் ஞானத்திரட்டு	1	0
ஷையார் ராஜயோகம்	1	0
மனுமுறை கண்டவாசகம்	0	8
சிவஞான சித்தியார் சுபக்கம்	4	8
திருவாசக மூலம்	1	8
ஷை உயர்ந்த பதிப்பு	3	0
வடமொழிச் சுருதி சூக்திமாலே	3	0
ஸ்ரீ சிவஞான சுவாமிகள் பிரபந்தம்	1	12
பிரபோத சந்திரோதய வசனம்	1	0
ஸ்ரீ விசார சாகரம்	3	4
பிரபுலிங்க லீலேவசனம்	1	0
அரிச்சந்திர புராண வசனம்	1	8
கல்லாடம் மூலமும் உரையும்	3	0
சிவதரு மோத்தரம்	3	0
திருவிசைப்பா	1	0
திவ்விய தேசயாத்திரையின் சரித்திரம்	2	0
திணைமொழி ஐம்பது	0	5
சோமேசர் முதுமொழி வெண்பா	1	12
திருக்கருவை பதிற்றுப் பத்தந்தாதி	1	4
பெரிய புராண வசனம்	1	4
தண்டியலங்காரம்	1	12
கட்டளைப் பிரபந்தம்	0	8
அறப்பளி சுர சதகம்	0	12
குமரேச சதகம்	1	0
சீகாளத்திப் புராணம்	2	8
நாலாயிர திவ்வியப் பிரபந்த சாரம்	0	8
விவேக சிந்தாமணி (2-ம் பாகம்)	1	2
ஸ்ரீ பக்த லீலாம்ருத வசனம்	3	0
துவைதசைவ கண்டனம்	3	0
குசேலோபாக்கியானம்	1	0
திருவெண் காட்டடிகள்	0	12
பிங்கல நிகண்டு	2	8
உரிச்சொல் நிகண்டு	0	8
சதகத்திரட்டு	0	12
மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பிரபந்தத் திரட்டு	2	8
வேதப்பொருள் விளக்கம்	0	12
அகம்புற ஆராய்ச்சி விளக்கம்	1	4
ராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம்	1	4
ராமதீர்த்த பரமஹம்ஸ விஜயம்	1	4
சச்சிதானந்த சிவம்	0	14
தாயுமானவர் பாடல்	1	0
பட்டினத்தார் பாடல் (பதவுரையுடன்)	2	0
வேதாந்த ரகசியம்	1	8
ஸ்ரீ கிருஷ்ணன் தூது	1	0
சங்கர விஜயம்	0	8
சிலப்பதிகாரக்கதை	1	0
கீர்த்திபெற்ற தீர்க்கதரிசிகளின் சரித்திரங்கள்	2	8

LAKSHMI BOOK DEPOT,

Post Box No. 99, MADRAS.

சுந்தரி கோல்ட்மெடல் ஆர்மோனியம் பெட்டிகள்.

இப்பெட்டிகளானவை உயர்ந்த தேக்கு மரத்தால் செய்யப் பட்டது. பல்லோர்களாலும் நன்கு மதிக்கப் பட்டு, தினசரி நூற்றுக் கணக்காக ஏற்றுமதி செய்யப் பட்டு வருகிறது. விலை விபரம். ரூ.

நெ. 1.	ஆர்மோனியம்	37 சுரம் 1-வரிசை 4-ஸ்டாப்பு ப்ரென்சுரீட்ஸ்	35
நெ. 2.	,,	ஜெர்மன்ரீட்	27
நெ. 3.	,,	1-வரிசை அமெரிகன்ரீட்	25
நெ. 4.	,,	2-வரிசை அமெரிக்கன்ரீட் 5 ஸ்டாப்பு ஒஸ்தி	40
நெ. 5.	,,	,, ஜெர்மன்ரீட் உள்ளது ...	45

கவனிப்பு —ஆர்டர் செய்பவர்கள் கால் பங்கு தொகை முன் பணம் அனுப்ப வேண்டும்.

விலாசம் :—எஸ். பாபு ஆர்மோனியம் தொழிற் சாலை,
தபாற் பெட்டி 289, மதராஸ்.

மணவாழ்க்கையின் மர்மங்கள்

இந்நூல் உங்களுக்கு இல்லாமல் முடியாது !

இஃது தகுந்த ஆயுர்வேத, ஆங்கில, மேற்கொள்கைகளைக்கொண்டு, மேலோரின் குடும்ப வாழ்க்கையில் சாஸ்திரோக்தம் போல் எழுதப்பட்டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். இதைக் கண்ணுல் காண்பதே பாக்கியமாகும். கையிலெடுப்பதே போக்கியமாகும். ஏராளமான பிரதிகள் விலையாய்விட்டன. எஞ்சி நிற்பவை கொஞ்சமே. கையிலெடுத்தவர் கீழே வைக்க மனந்துணியார். இன்றே எழுதுங்கள். பிந்தினவருக்குப் பிரதி கிடைக்கமாட்டாது. முன் வெளியிடப்பட்ட "கோக்கோகக் கோலம்" என்னும் நூலின் விரிவு நூலே இஃது என்பது நண்பர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

விலை ரூபா 2—4—0 தபால் செலவு 0—6—0.

துளசிரும் புக் டிபோ,
33, தையப்ப முதலி தெரு, ஜி. டி. மதரூஸ் (ல).

நெடுநாளாக எதிர் பார்த்துக் கொண்டிருந்த

'நீக்ரோ' பொம்மையுள்ள.

கண்ணுட்டும் அலாரம் டைம்பீஸ்.



புதிய சரக்கு. இதன் அருமை யாதெனில், அலாரம் வேண்டிய காலங்களில் அடிக்கும். தவிர மணியை காட்டும் பொழுது இக்கடியாரத்தில் கண்ட பொம்மையின் கண்கள் மிகவும் ஆச்சரியமாக ஆட்டிக் கொண்டே இருக்கும். காலத்திற்கு சரியான மணியை காட்டும்.

விலாசம் :— விலை 1-க்கு ரூபா 5.

P. K. SAWMY & Co.,
No. 17, Bvening Bazaar MADRAS.

மிழ்நாடு
210305
சென்னை-600 008

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	நெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை.
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	8½	,,	10	,,

கம்பளிச் சட்டை.

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்றிக் கொள்ள உதவும். கலர் கிரே, கறுப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகலம் ரூ. 5.

கம்பளி ஆசனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, 1½. உசத்தி ரூ. 3½ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் 2½ முழம் அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடி தாவளி.

இது அசல் கம்பளியால் நெய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக்கொள்ள உபயோகமுள்ளது.

5 முழம்	24	இஞ்சு	அக. ரூ,	2		10 முழம்	40	இஞ்சு	அக. ரூ.	7
6 ,,	24	,,	,,	2½		16 ,,	40	,,	,,	12
7 ,,	29	,,	,,	3						
8 ,,	40	,,	,,	5½		18 ,,	40	,,	,,	14

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ் - - காசி.

குளிர் !　　குளிர் ! !　　குளிர் ! ! !

தேகாரோக்யத்தை கவனியுங்கள்.

சுதேசி கம்பளி போர்வை.

அசல் கம்பளி கரையில்லாதது. எல்லா கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1. 6 மு × 3 வீ விலை ரூ. 10.
நெ. 2. „ „ 7.
நெ. 3. „ „ 6.

மேகவர்ணப் போர்வை.

ஜெர்மனியில் செய்தது நைஸான துணி. பலவிதமான கலர்களில் கிடைக்கும். ஒரே மாதந்தான் இந்த விலை.

நெ. 1. 6 மு × 3 வீ விலை ரூ. 14.
நெ. 2. „ „ 10.

பாரிஸ் உல்லன் சால்வை.

அசல் உல்லன், அழகான பட்டிலுல் பூவேலைகள் செய்யப் பட்டது. புதுமாதிரியான ரகம் எல்லாக் கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1. 6 மு × 3 வீ. விலை ரூ. 16.
நெ. 2. „ „ 14.

உல்லன் மப்ளர்.

வாடைகளை போக்கடிக்கக் கூடியது. கழுத்தில் கட்டி காதை மறைத்துக் கொள்வது. காக்கி வெள்ளை முதலிய கலர்கள்,

5 மு × 7 இஞ்சு விலை ரூ. 2-8-0.

ஜெர்மன் கம்பிக்கரை போர்வை.

பலவிதமான கலர்களில் கிடைக்கும். அழகான கம்பிக் கரை.

6 மு × 3 வீ. விலை ரூ. 10, 12.

உல்லன் ரக் (Rug)

உயர்ந்த கம்பளியால் செய்யப் பட்டது. நல்ல குளிரில் போர்த்துக் கொள்ள உதவும். கருப்பு, புளூ முதலிய கலர்கள்.

6 மு × 3 வீ. விலை ரூ. 12,14,18.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

தபால் பெட்டி 99

சென்னை.

PRINTED AT VEST & Co., MADRAS AND PUBLISHED BY K. S. SUNDARAM.